வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.03.2024 சனிக்கிழமை இதழ் : 62 பக்கங்கள் : 12

# நயினை, அனலை, நெடுந்தீவில் இந்திய உதவியில் மின் திட்டம்!

## உடன்படிக்கை நேற்று கைச்சாத்து

கொழும்பு, மார்ச் 02

**யாழ்ப்பாணத்தின் நயினாதீவு, நெடுந் தீவு, அனலைதீவில் மீள்புதுப்பிக்கத்தக்க கலப்பு எரிசக்தி அமைப்புகளை நிறுவுவ தற்கான ஒப்பந்தத்தில் இலங்கையும் இந் தியாவும் நேற்று வெள்ளிக்கிழமை ஒப்ப மிட்டன.**

இந்திய அரசாங்கத் தின் 10.995 மில்லியன் டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமாராக 339 கோடி ரூபாய் நிதி மானி யத்தில் இந்தத் திட்டம் அமைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை எதிர் வரும் 2025 மார்ச் மாதத் துக்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவை தளமா கக் கொண்ட யு- சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன் என்ற நிறுவனம் இந்தத் திட்டத்தை செயல்படுத் துகிறது. இந்த மின் உற் பத்தித் திட்டத்தின் மூலம் மூன்று தீவுகளி லும் 530 கிலோ வாட்ஸ் மின்சாரம் காற்றாலை மூல மும், 1,700 கிலோவாட்ஸ் சூரிய சக்தி மூலமும் 2,400 கிலோ வாட்ஸ் பற் றரி சக்தி மூலமாகவும் 2,500 கிலோவாட்ஸ் டீசல் சக்தி மூலமா கவும் உற்பத்தி

11





# பாக்கு நீரிணையை நீந்தி கடந்து மாணவன் சாதனை!

மன்னார், மார்ச் 01

பாக்கு தொடுகடலை 13 வயதான ஹரிகரன் தன் வந்த் என்ற மாணவன் நீந்திக் கடந்து சாதனை படைத் துள்ளார்.

இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரையான 32 கிலோமீற்றர் தூரத்தை 9 மணித்தியாலங் கள் 37 நிமிடங்கள் 54 செக்கன்களில் அவர் நீந்திக் கடந் துள்ளார். இதன் மூலம் குறைவான நேரத்தில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையர் என்ற பெருமை யையும் தன்வந்த் பெற்றுள்ளார்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில்

11

# சாந்தனின் உடலம் இலங்கை வந்தது

- பிரேத பரிசோதனையால் யாழ். வருவது தாமதம்
- வவுனியாவிலிருந்து ஊர்தி பயணத்துக்கு ஏற்பாடு
- இறுதிக்கிரியை தொடர்பில் இன்னும் முடிவில்லை



யாழ்ப்பாணம், மார்ச் 02

சென்னையில் உயிரிழந்த சாந் தன் என்று அறியப்பட்ட தில்லை யம்பலம் சுதேந்திரராஜாவின் உட லம் நேற்று வெள்ளிக்கிழமை விமானம் மூலம் நாட்டை வந்த டைந்தது.

கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் அவரின் உடலத்தை பெறுவதில் தாமதம் நிலவியது. நீண்ட இழுபறியின் பின்னர் சாந் தனின் உடலத்தை விமான நிலைய அதிகாரிகள் ஒப்படைத்தனர். குர லற்றவர்களின் குரல் அமைப்பின ரும் சாந்தனின் உறவினர்களும் பொறுப்பேற்றனர்.

உடலம் பிரேத பரிசோத னைக்கு கட்டாயம்

11

# ஓ.எல்., ஏ.எல்., புலமைப்பரிசில் பரீட்சை திகதிகள் அறிவிப்பு!

கொழும்பு, மார்ச் 02

க. பொ. த. சாதாரண தரம் (ஓ. எல்) , உயர்தரம் (ஏ. எல்.) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக ளுக்கான திகதிகளை பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

இதன்படி, 2023ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே 6ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடத்தப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர் தரப் பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி முதல்

11

# இ. போ. ச. - தனியார் இணைந்த பேருந்து சேவையை ஆராய குழு!

## வடக்கு ஆளுநர் அமைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து (தூர இடங்களுக்கான) இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்துகள் இணைந்து சேவையை முன்னெ டுப்பது தொடர்பில் ஆராய ஐவர் கொண்ட குழு நேற்று வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். எம். சமன் பந்துலசேன தலைமையில் வடக்கு

11

# சாவகச்சேரி விபத்தில் மாணவன் உயிரிழப்பு!

தென்மராட்சி, மார்ச் 02

பாடசாலையில் விளையாட்டு பயிற்சியை முடித்து விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாண வன் இ. போ. ச. பேருந்து மோதியதில் உயிரிழந்தார்.

சாவகச்சேரி - ஐயா கடை சந்தியருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் - மீசாலை கிழக்கை சேர்ந்த சிவநாவலன்

11

பொன் அணிகளின் போர்:

# யாழ்ப்பாணக் கல்லூரி 189 ஓட்டங்கள் குவிப்பு!

## சென். பற்றிக்ஸ் 45/3



யாழ்ப்பாணம், மார்ச் 02

பொன் அணிகளின் போரில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 189 ஓட்டங்களை குவித்துள்ளது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய சென். பற்றிக்ஸ் நேற்றைய நாள் முடிவில் 45 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது.

11

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலர் கைது!

கொழும்பு, மார்ச் 02

சுகாதார அமைச்சின் மருத்துவப் பொருட்கள் மற் றும் வழங்கல் ஒழுங்குமுறை மேலதிக செயலாளர் மருத் துவர் சமன் ரத்நாயக்க குற்றப் புலனாய்வுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின்

11

# இந்து சமுத்திர பிராந்தியத்தை காக்கும் பொறுப்பு கடற்படைக்கு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

திருகோணமலை, மார்ச் 02

இலங்கையின் கடல் பிராந்தியத்தையும் இந்து சமுத் திரப் பிராந்தியத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

11

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய விவாதம் தமிழ் மக்கள் மத்தியில் முளைவிடத் தொடங்கிவிட்டிருந்தாலும் அதுகுறித்து இன்னமும் தீவிர கரிசனை காட்டப்படவில்லை.

இந்த நேரத்தில் தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஆர்வமாக இருக்கும் தலைவர்கள் தங்கள் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கருத்துகளை வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர்.

கடந்த மாதம் எட்டாம் திகதி ஜனாதிபதி தனது அரசின் எதிர்காலத் திட்டங்களை பாராளுமன்றத்தில் வெளியிட்டார். பாராளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு மீண்டும் பாராளுமன்றம் கூடியபோது தனது அரசின் கொள்கை விளக்க உரையை ஆற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த உரையில் மறந்தும்கூட இனப்பிரச்னைக்கு தீர்வு பற்றி எதுவும் கூறவில்லை.

அவர் மாத்திரமன்றி அந்த உரை மீது நடந்த விவாதத்தில் தனது கட்சியின் இருபது அம்ச திட்டத்தை வெளியிட்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் அந்தத் தனது இருபது அம்சத் திட்டத்தில் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது பற்றி எதுவும் கூறவில்லை என்பதும் நமக்கு கவனத்திற்குரியது.

ஜனாதிபதித் தேர்தலில் சந்தர்ப்பம் கிடைத்தால் பொதுவேட்பாளராக போட்டியிடவேண்டும் என்ற எண்ணத்தில் பல வருடங்களாகவே காய் நகர்த்தி வரும் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவும் அண்மையில் 'நமது தேசத்திற்காக ஒற்றுமையுடன் ஓர் அடி முன்னோக்கி' என்ற தலைப்பில் வெளியிட்ட பன்னிரண்டு அம்ச வேலைத் திட்டத்திலும் இனப்பிரச்னை தீர்வு கண்டுகொள்ளப்படவில்லை.

ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்தி பற்றி இங்கு எழுதித் தெரிய வேண்டியதில்லை. அவர்களே பெற்றோல் ஊற்றி இந்த நாட்டில் பற்ற வைத்த இனவாதத் தீ இன்னமும் பற்றி எரிந்து கொண் டிருப்பதால் இனப்பிரச்னை பற்றி இப்போது பேசவேண்டியதில்லை என்றும் தேர்தலில் தாம் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்த பின்னர் புதிய அரசியலமைப்பின் மூலம் அதற்குத் தீர்வுகாணலாம் என்றும் 'கதை விட்டுக்' கொண்டிருக்கின்றனர். அண்மையில், யாழ்ப்பாணம் வந்திருந்த அவர்களின் முக்கிய தலைவர் ஒருவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து ஆதரவு திரட்டியிருந்தார். அப்போது அவர் சந்தித்தவர்கள் அனைவரும் இவரிடம் கேட்டது, இனப்பிரச்னைக்கு உங்கள் தீர்வு என்ன என்பது பற்றியே. ஆனால், அவர்களுக்கு எந்தத் பதிலும் வழங்காது முதலில் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அதுபற்றி பேசலாம் என்றிருக்கிறார்கள்.

ஆக, அவர்களைப் பொறுத்த வரை பதின்மூன்றும் தேவையற்ற ஒன்று. அதனையும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் (வந்தால்) தாங்கள் தயாரிக்கும் அரசியலமைப்பில் இருந்து நீக்கிவிடுவார்களோ தெரியவில்லை.

இந்த நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிப்பதற்கு இனப்பிரச்னையும் ஒரு முக்கிய காரணம் என்பதை தமிழ் அரசியல் தலைவர்கள் எவ்வளவுதூரம் திரும்பத்திரும்பச் சொன்னாலும் அது தெற்கில் உள்ள தலைவர்களுக்கு ஏறுவதாகத் தெரியவில்லை.

யுத்தம் நடந்துகொண்டிருந்த போது, அதாவது தமிழர் தரப்பு ஆயுத ரீதியாக பலமாக இருந்து போது, தான் ஆட்சிக்கு வந்தால் சமஷ்டி தீர்வையே தருவேன் என்று தேர்தலில் போட்டியிட்டவர் ரணில் விக்கிரமசிங்க. இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு தேர்தலில் அவர் அவ்வாறு சொன்னபோது தேர்தலை பகிஷ்கரித்தன் மூலம் அவரை தோற்கடித்தவர்கள் தமிழ் மக்கள்.

அதற்கு முன்னர், சந்திரிகா அம்மையார் பிராந்தியங்களின் சபையை அமைப்பதாகச் சொல்லி தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றிருந்தபோதிலும் அவர் அதனைச் செய்ய முனைந்த போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து நமது சம்பந்தன் தலைமையிலான கூட்டணியும் அதனை எதிர்த்து அதனை நிறைவேற்றாமல் செய்தது.

இவையெல்லாம் பழைய சங்கதிகள்தான். ஆனால், இப்போது தமிழ் மகக்கள் தமது பலம் என்ன என்பதையாவது வெளிப்படுத்த வேண்டியநிலையில் இருக்கிறார்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் முக்கிய மூன்று வேட்பாளர்களுமே தமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக தத்தமது அடுத்த திட்டங்களில் இனப்பிரச்னை விவகாரத்தை முக்கிய பேசுபொருளாகக் கொள்ளாவிட்டாலும் கொழும்பில் கடந்த புதனன்று நடைபெற்ற தேசிய சமாதானப் பேரவையின் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை எற்படுத்துவது பற்றி பல விடயங்களை கூறியிருக்கிறார்.

மதங்களுக்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி, 'அடுத்த பிரச்னை அதிகாரப் பகிர்வு. அதற்குள் அதிகாரப் பகிர்வின் 13ஆவது பட்டியலின் அதிகாரங்களை வழங்குவதே இங்கு முதன்மையான கோரிக்கையாகும். பொலிஸ் அதிகாரத்தில் நாம் தலையிடப் போவதில்லை. அதனைப் பின்னர் பார்க்கலாம். காணிச் சட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், 13ஆவது பட்டியலில் உள்ள மற்ற விடயங்களை வழங்குவதில் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. அதற்காக மற்றைய கட்சிகளுடன் கலந்துரையாடி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டு வருகிறது.' என்று தெரிவித்திருக்கிறார்.

ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி இணக்கம் எட்டப்பட்டு வருவதாக அவர் கூறியிருக்கின்ற போதிலும் அது தொடர்பாகப் பேசுவது குறித்து இதுவரை எங்கும் நாம் அறியமுடியவில்லை.

ஐ. நா. மனிதஉரிமை பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கின்ற வேளைகளில் எல்லாம் இதுபோன்ற கதைகளை சொல்வது சிறீ லங்கா அரச தரப்புக்கு பழக்கமான ஒன்றுதான்.

ஆனால், ஜனாதிபதி இது போன்று பல தடவைகள் உறுதியளித்திருக்கிறார். இவ்வாறு பேச்சோடு நிற்காமல், அதனை செயலில் உருவாக்கினால், இந்த நாடு தனது பிரச்னைகளில் அரைவாசிப் பிரச்னைக்கு தீர்வுகண்டுவிட்டதற்கு சமனானது.!

- ஊர்க்குருவி.

# விமல் வீரவன்ஸ நேற்றும் மன்றில் ஆஜராகவில்லை!

கொழும்பு, மார்ச் 02

வருமானத்துக்கு மேலதிகமாக 7.5 கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்த விமல் வீரவன்ஸவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் நேற்று அவர் மன்றில் முன்னிலையாகவில்லை.

காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கால் அவர் அவதிப்பட்டு வருகிறார் என்று சட்டத்தரணிகள் நேற்றைய வழக்கு விசாரணையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்கவிடம் தெரிவித்தனர்.

அத்துடன், மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பித்தனர். இதையடுத்து, அவருக்கு வரும் 7ஆம் திகதி வரை மன்றில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

இதன்போது, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, குற்றஞ்சாட்டப்பட்டவர் செப்ரெம்பர் 13ஆம் திகதி முதல் சுகயீனமுற்றார் என்றும் அவர் அவ்வப்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் வழக்கை விரைவாக நிறைவு செய்ய முடியாது என்றும் அவர் உடனடியாக தகுந்த மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெறுவது உத்தமம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து எதிர் வரும் 22ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் அவர் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார்.

கடந்த 2010 முதல் 2014 வரை அமைச்சராக இருந்த விமல் வீரவன்ஸ சம்பாதித்த சொத்துகள் மற்றும் பணத்தை வெளியிடத் தவறியதன் மூலம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்தார் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் அவருக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விஞ்ஞான பரீட்சை வினாத்தாள் சமூகவலைதளத்தில் வெளியானது!

கொழும்பு, மார்ச் 02

மேல் மாகாண பாடசாலைகளின் பரீட்சை வினாத்தாள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 2023 கல்வி ஆண்டுக்கான இறுதி தவணை பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. இதன்படி, 10, 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞானம் பாடத்துக்கான பரீட்சை நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், மேல் மாகாண கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரம் 10 இன் விஞ்ஞான முதலாம் வினாத்தாள் மற்றும் தரம் 11 இன் விஞ்ஞான இரண்டாம் வினாத்தாள் நேற்றுமுன்தினம் மாலை 7 முதல் 8 மணிக்கு இடைப்பட்ட காலத்தில் சமூக ஊடகங்களில் வெளியாகியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், நேற்றுக் காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆசிரியர்கள் குழுவொன்று முறைப்பாடு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர்.

# தும்புத்தடியினால் ஆசிரியர் தாக்கியதில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, மார்ச் 02

பாதுக்க பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவர் மூன்று மாணவர்களை தும்புத்தடியின் கைப்பிடியால் தாக்கியதில் மூவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், மற்ற இருவரின் உடல்நிலையில் முன்னேற்றமடைந்துள்ள தாகவும் அவர் கூறினார்.

குறித்த மூன்று மாணவர்கள் உட்பட 7 மாணவர்கள் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்தவேளை குறித்த மாணவர்களின் வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் இந்த மூன்று மாணவர்களையும் தாக்கியதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

# மற்றோர் இராணுவ அதிகாரியும் சஜித் கட்சியில் இணைந்தார்!

கொழும்பு, மார்ச் 02

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான லெப். கேணல் ரத்னப்பிரிய பந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று சந்தித்து அவர் கட்சியில் இணைந்து கொண்டார்.

கட்சியில் இணைந்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய ஐக்கியம் அமைதி ஆகியவற்றுக்கான குழுவின் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# நேரத்தை முன்கூட்டி ஒதுக்கியே இனி சேவையை பெறமுடியும்!

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

கொழும்பு, மார்ச் 01

எதிர்வரும் திங்கட்கிழமையின் பின்னர் சேவைகளை பெற்றுக்கொள்ள வருவோர் முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டியது கட்டாயம் என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக இரு முறைமைகள் பின்பற்றப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் கட்டாயமாக்கப் பட்டுள்ளதாகவும் தமது திணைக்களத்தின் இணையத்தளமான www.dmtappointments.dmt.gov.lk பிரவேசித்து நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியுமெனவும் தொலைபேசி (011 2117116) அழைப்பின் ஊடாகவும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.03.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முக்கிய தேர்தல்களின் ஆண்டு

இந்த ஆண்டு இலங்கைத் தீவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பு முனையாக அமையலாம். ஒருவேளை அநுரகுமார திஸநாயக்க வெற்றிபெற்றால் அது ஒரு புதிய வரலாறாக அமையும். - அதே வேளை, இலங்கைத் தீவு இதுவரை காணாத அரசியல் அனுப வமாகவும் இருக்கலாம். ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றாலும் அதுவும் ஆச்சரியம்தான். ஏனெனில், ஓர் ஆசனத்துடன் காணாமல் போயிருந்த ஒருவர் மீண்டும் மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதியானால் - அதுவும்கூட வரலாற்று சாதனையாகவே நோக்கப்படும். சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியானால் அது வேறுவிதமான அனுபவங் களைத் தரலாம். ஒருவேளை மீண்டும் நாட்டில் குழப்பங்களும் ஏற்படலாம். அதனைக் கையாள முடியமால் புதிய பிரச்னைகள் ஏற் படலாம்.

இலங்கைத் தீவில் இவ்வாறான விடயங்களை எதிர்வு கூறும் போது, பிராந்தியத்திலும் உலகளவிலும் பல மாற்றங்களுக்கான முக்கிய இரண்டு தேர்தல்கள் இந்த ஆண்டில் நடைபெறவுள்ளன. இந்த ஆண்டு அமெரிக்க மக்கள் அவர்களுக்கான புதிய ஜனாதி பதியை தெரிவு செய்யவுள்ளனர். தற்போது ஜனாதிபதியாகவுள்ள ஜோ பைடனை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டிடவுள்ளாரென செய்திகள் வெளிவருகின்றன. குடியரசு கட்சிக் கான வேட்பாளர் போட்டியில் அவரே முன்னிலையில் இருக்கின்றார். ஒருவேளை ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானால் உலகளவில் பல விடயங்களை எதிர்பார்க்கலாம். ஜனாதிபதி ட்ரம்பின் முன்னைய காலம் மிகவும் சர்ச்சைக்குரியதாக இருந்தது. அவர் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன - அவை அனைத்தையும் மீறி அவரை அமெரிக்க மக்கள் தெரிவு செய்தால் அமெரிக்காவின் உள்ளக அரசியலிலும் பல நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அடுத்தது இந்தியா - இந்த ஆண்டு இந்தியாவின் மக்களவைக் கான தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் பாரதிய ஜனதா கட்சியும் (பா. ஜ. க. ) - ‘இந்தியா’ கூட்டணியும் மோதவுள்ளன. இதில் பா. ஜ. க. பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் வெற்றிபெறுமாக இருந்தால் இந்தியாவின் உள்ளக அரசியலிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம். மீண்டும் மோடி பிரதமராக வருவாரானால் ஜவஹர்லால் நேருவுக் குப் பின்னர் மூன்று தடவைகள் தொடர்ந்தும் பிரதமராக இருந்த ஒரே தலைவர் என்னும் பெருமையை மோடி பெறுவார். மோடியின் இந்துத்வா மேலும் எழுச்சியுறும் அது இந்தியளவில் மட்டுமல்லாது தெற்காசிய அளவிலும் இந்தியாவின் முக்கியத்துவத்தை பல்வேறு தளங்களில் உயர்த்தலாம்.

அதேவேளை, இரண்டு தேர்தல்களின் வெற்றியும் இலங்கையின் அரசியலில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் நேரடியான செல்வாக்கை செலுத்தாது விட்டாலும்கூட மறைமுகமான தாக்கங்களை ஏற்படுத்தும். குறிப்பாக, ட்ரம்ப் வெற்றி பெறுவாராக இருந்தால் சீனாவுடனான அமெரிக்க முரண்பாடுகள் இன்னும் சற்று ஆக்கோரஷமாக முகங்காட்டும். ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது, அவரின் இராஜாங்க செயலராக இருந்த மைக் பொம்பியோ, சீனா இலங்கையின் இறைமையை நிலத்திலும் கடலிலும் மீறி வருவ தாகக் குறிப்பிட்டிருந்தார். அந்த அடிப்படையில் இலங்கை மீதான பார்வை தீவிரமடையலாம். இதேபோன்று, மோடி மீண்டும் பிரதமரா னால் இந்தியாவின் அயலுறவு சிக்கல்களை சற்று ஆவேசமாக கையாளவும் வாய்ப்பு உண்டு. ஒருவேளை இந்தியா சற்று கடும்போக்கு முகத்தைக் காண்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மொத்தத்தில் 2024 தேர்தல்கள் பல மாற்றங்களுக்கான அடிப்படையாக இருக்கப் போகின்றன.

# எதிர்மறையான சமாதானத்தில் இருந்து நேர்மறையான சமாதானத்துக்கு…!

*தேசிய சமாதானப் பேரவையினால் “நல்லிணக்கத்துக்கு மதங்கள்“ சகல தரப்புகளையும் அரவணைக்கும் நல்லிணக் கத்தை வலுப்படுத்தல் என்ற தொனிப் பொருளில் கொழும்பில் ஏற்பாடு செயயப் பட்டிருந்த தேசிய கருத்தரங்கில் இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு மற்றும் தேசிய நல்லிணக்கத்தைச் சாதிப்பதற்கு அரசியல் கருத்தொருமிப்பின் தேவை உணரப்பட்டதை அலதானிக்கக்கூடியதாக இருந்தது.*

*வடக்கு, கிழக்கு உட்பட 17 மாவட் டங்களில் இருந்து பல்வேறு மதங்களின் தலைவர்களும் மதங்களுக்கு இடையிலான குழுக்களைச் சேர்ந்த சமுதாய அடிமட்டத் தலைவர்களுமாக 300 க்கும் அதிகமான வர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.*

*முன்னெடுக்கப்படவேண்டிய அவசிய மான நடவடிக்கைகள், நிறுவப்பட வேண்டிய புதிய பொறிமுறைகள் மற்றும் உகந்த சூழ்நிலையை உருவாக்கவேண்டிய தேவை குறித்து கருத்தரங்கில் கலந்து கொண்ட அரசாங்க மற்றும் எதிரணி அரசி யல் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தி னார்கள்.*

*தனது நல்லிணக்கத் திட்டத்தை விளக்கிப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நாடு நல்லிணக்கச் செயன்முறையின் இறுதிக்கட்டங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.*

*சிறைக்கைதிகள், காணாமல் போனவர் களின் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் அமைக்கப்பட விருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஊடாக அவற்றுக்கு தீர்வு களைக் காண்பது, காணிப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய காணி ஆணைக்குழு சட்டத்தை நிறைவேற்றுதல், பொதுப்பட்டியல் ஊடாக மாகாண சபைகளை பலப்படுத்துதல் குறித்து அவர் விளக்கம் அளித்தார்.*

*இவை தொடர்பில் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்படவிருக்கும் ஒருமித்த யோசனைகளை உள்ளடக்கிய “இமாலயப் பிரகடனத்தை“ சில பௌத்த மதகுருமாரும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களும் கையளித்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி கூறினார்.*

*ஜனநாயக செயன்முறைகளைப் பின் பற்றுதல், தேர்தல்களை நடத்துதல் மற்றும் நிறுவனங்களின் சுயாதீனத்தை உறுதி செய் தல் உட்பட உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டிய தேவை மீது கவனத்தைச் செலுத்தி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.*

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*சமாதானத்துக்கும் நல்லிணக்கத் துக்குமான உகந்த சூழ்நிலையை உரு வாக்குவதில் சிவில் சமூகத்தினால் முன்னெ டுக்கப்படக் கூடிய பணிகளைப் பொறுத்த வரை அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறு னங்களைப் பதிவுசெய்வதற்கும் கண்காணிப் பதற்கும் கொண்டுவரப்படவிருக்கும் புதிய சட்டம் பெரிய பின்னடைவாக இருக்கும் என்று தேசிய சமாதானப் பேரவை கருத்தை முன்வைத்தது.*


*எதிர்க்கட்சி தலைலர் சஜித் பிரேமதாச கருத்தரங்கிற்கு அனுப்பிவைத்த செய்தி பெரும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தந்தது.*

*“சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு தங்களை அர்ப்பணித்தி ருக்கும் அமைப்புக்கள் குறைந்தபட்ச சட்டக் கட்டுப்பாடுகளுடன் அவற்றின் பணிளை முன்னெடுப்பதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில் எந்த அரசாங்கத்துக்கும் இருக்கும் கடப்பாடு பேச்சுவார்த்தைக்கு அப் பாற்பட்டது என்று நாம் நம்புகிறோம்” என்று பிரேமதாச செய்தியில் கூறியிருந் தார்.*

*இனநெருக்கடியைத் தீர்த்துவைப்ப தற்கும் தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கும் கருத்தொருமிப்பு எந்தளவுக்கு தேவையோ அதேயளவுக்கு ஜனநாயக மற் றும் மனித உரிமைகளையும் சிவில் சமூ கத்தின் சுதந்திரங்களையும் பாதுகாப்பது தொடர்பிலும் கருத்தொருமிப்பு அவசியம் என்று நாம் நம்புகிறோம். அரச பொறிமுறை கள் நம்பகத்தன்மையுடன் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதற்கு சிவில் சமூக சுதந்திரங்கள் ப்துகாக்கப்படக்கூடிய சூழ் நிலை உருவாக்கப்படவேண்டியது அவசியம்.*

*அரசு தங்களுக்கு பாதுகாப்பு அளித்து பேணிவளர்க்கிறது என்று சகல மக்களும் உணருகின்ற சூழ்நிலையே நேர்மறையான சமாதானம் என்று காலஞ்சென்ற பேராசிரி யர் ஜெஹான் கல்ருங் கூறினார். அத்தகைய சமாதானத்தை கருத்தொருமிப்பு ஒன்றினால் மாத்திரமே கொண்டுவரமுடியும். மாறாக, வெறுமனே போர் இல்லாத சூழ்நிலை எதிர் மறையான சமாதானமேயாகும்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மார்ச் - 02 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 19**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : சப்தமி**




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதுசலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் உங்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளரிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**தனுசு**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். நிர்வாகத் திறமை வெளிப்படும். கடமை உணர்வுடன் செயல்படுவீர்.

**கும்பம்**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அறியாம லேயே ஒரு வித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

# இந்தியா கூட்டணியில் அ. தி. மு. க. இணையும்?

சேலம், மார்ச் 02

இந்தியா கூட்டணியில் அ. தி. மு. க. இணைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து இரண்டு நாட்களுக்குள் பதில் கிடைக்கும் - இவ்வாறு அ. தி. மு. க. கட்சியின் கொள்கை பரப்பு செயலர் வைகைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில், அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமியை, அ. தி. மு. க. கொள்கை பரப்பு செயலாளர் வைகைச் செல்வன் சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் வைகைச் செல்வன் கூறியவை வருமாறு,

அ. தி. மு. க. கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று வருகிறது. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணியில் கசப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான மருந்து அதிமுகவுடன் இருப்பதாக காங்கிரஸ் நம்பினால் விரைவில் நல்ல முடிவு எட்டப்படும். இந்தியா கூட்டணியில் அ. தி. மு. க. இணைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து இரண்டு நாட்களுக்குள் பதில் கிடைக்கும்.

தமிழ் மாநில காங்கிரஸ்(த. மா. கா) பா. ஜ. கவுடன் உறவில்தான் இருந்தார்கள். தற்போது பா. ஜ. கவுடன் த. மா. கா. இணைந்துள்ளது. அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து, த. மா. கா. பிரிந்ததால் தாக்கம் ஏதும் இருக்காது.

மக்களவைத் தேர்தலுக்காக மிகப்பெரிய வியூகங்களை அமைப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ஓ. பி. எஸ். தரப்புக்கு கடைசி வாய்ப்பாக பா. ஜ. கவுடன் இணைவதற்கு மட்டும் தான் வாய்ப்பு உள்ளது. ஆனால், அங்கும் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று தகவல்கள் வந்துள்ளன - என்றார். (ஐ)

# தி. மு. க. - ம. தி. மு. க. கூட்டணி பேச்சு இழுபறி!

சென்னை, மார்ச் 02

தி. மு. க. கூட்டணியில் ம. தி. மு. க. ஒரு மக்களவை ஒரு மாநிலங்களவை இடங்களை இறுதியாகக் கேட்ட நிலையில் தி. மு. க. ஒரு மக்களவை தொகுதி மட்டுமே தற்போது தருவோம் என பிடிவாதமாக இருப்பதால் ம. தி. மு. கவுடனான தொகுதி உடன்பாடு இழுபறியில் உள்ளது.

மக்களவைத் தேர்தலில் 24 தொகுதிகளில் தி. மு. க. நேரடியாகவும் 3 தொகுதிகளில் தங்கள் சின்னத்தில் மற்றவர்கள் போட்டியிடும் வகையில் கூட்டணி பங்கீட்டை முடிக்க தி. மு. க. திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், ம. தி. மு. க. சார்பில் அந்தக் கட்சியின் அவைத்தலைவர் அர்ஜூனராஜ் தலைமையில், பொருளாளர் மு. செந்திலதிபன், அரசியல் ஆய்வு மைய செயலாளர் அந்திரிதாஸ் உள்ளிட்டோர் பேச்சில் பங்கேற்றனர். முதல் இரண்டு முறையும் 3 தொகுதிகள் மற்றும் தங்களின் பம்பரம் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து பேசினர். ஆனால், உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்நிலையில், நேற்று 3ஆம் கட்ட பேச்சு நடைபெற்றது. இதில், இறுதியாக கடந்த தேர்தலின்போது முடிவான ஒரு மக்களவை, ஒரு மாநிலங்களவை இடங்களை இந்த முறையும் தரும்படியும், பம்பரம் சின்னத்தில் போட்டியிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தி. மு. க. சார்பில் மக்களவை தொகுதி மட்டுமே தருவதாக தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால், உடன்பாடு எட்டப்படாமல் இழுபறி ஏற்பட்டுள்ளது.

# இரட்டை இலை சின்னத்தை கோரும் பன்னீர்செல்வம்!



சென்னை, மார்ச் 02

பாராளுமன்றத் தேர்தல் அண்மிக்கும் நிலையில் அ. தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கலை ஏற்படுத்த பன்னீர்செல்வம் தரப்பினர் திட்டமிட்டுள்ளனர். இது, பழனிசாமி தரப்பினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தயுள்ளது.

அ.தி.மு.க.,வில் இருந்து நீக்கப்பட்ட, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், 'அ. தி. மு. க., தொண்டர்கள் உரிமை மீட்பு குழு' ஏற்படுத்தி, தனி அணியாக செயல்பட்டு வருகிறார். அனைத்து மாவட்டங்களுக்கும் நிர்வாகிகளை நியமித்துள்ளார்.

பா.ஜ. க. கூட்டணியில் இருந்து, அ.தி.மு.க., விலகிய நிலையில், அந்தக் கூட்டணியில் இணைந்து பாராளுமன்றத் தேர்தலை சந்திக்க முடிவு செய்துள்ளார்.

அ. தி. மு. கவில் இருந்து, அவர் நீக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கில், இதுவரை வெளியான தீர்ப்புகள் அனைத்தும், அ. தி. மு. க., பொதுச்செயலர் பழனிசாமிக்கு சாதகமாகவே வந்துள்ளன. தற்போதைய நிலவரப்படி, கட்சி, சின்னம், கொடி ஆகிய அனைத்தும், பழனிசாமி வசம் உள்ளது. கட்சி பெயரை, கொடியை பன்னீர் செல்வம் பயன்படுத்த, நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் பாராளுமன்றத் தேர்தலில், இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவோம் என, பன்னீர்செல்வம் கூறி வருவது, அ.தி.மு.கவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கு வாய்ப்பில்லை என, பழனிசாமி தரப்பு கூறினாலும், இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கல் வந்துவிடுமோ என்ற அச்சம் கட்சி நிர்வாகிகளிடம் உள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும், இரட்டை இலை சின்னத்தை, தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் தரப்பு தேர்தல்கள் ஆணையத்தில் முறையிட திட்டமிட்டுள்ளது. அவ்வாறு முறையிடும் போது, தங்களுக்கு சின்னம்கிடைக்கும். இல்லையெனில், சின்னம் முடக்கப்படும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# தேர்தலில் களமிறங்கும் அண்ணாமலை



சென்னை, மார்ச் 02

பாராளுமன்றத் தேர்தலில பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை போட்டியிடுவார் என்று அறிய வருகிறது.

மூன்றாவது முறையாக வெற்றி பெற்று பிரதமராக வேண்டும் என்பதில் பிரதமர் மோடி உறுதியாக இருக்கிறார். அதற்கு வலுசேர்க்கும் வகையில் 370 இடங்களை பிடிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்து பணியாற்றி வருகிறது பாரதிய ஜனதா.

இந்நிலையில் பாரதிய ஜனதாவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கரூர் அல்லது கோவை தொகுதியில் அவர் போட்டியிடலாம் என கூறப்படுகிறது. அந்தக் கட்சியின் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில் இது குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

ஈழநாடு



# கண்ணீர்ப்புகைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி வழக்கு!

## உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

கொழும்பு, மார்ச் 02

**வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராக குருந்துவத்தை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்திற்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட நீர் மற்றும் கண்ணீர் புகை தாக்குதல்களினால் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் அதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபர் ரஹ்மான் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் விஷேட அதிரடிப் படைத் தளபதி வருண ஜயசுந்தர, குருந்துவத்தை, கோட்டை மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனவரி 30ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி விஹார மகாதேவி பூங்காவில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு குருந்துவத்தை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியாயமான காரணமின்றி அமைதியான முறையில் நடந்த போராட்டத்திற்கு எதிராக தன்னிச்சையாகவும், சட்ட விரோதமாகவும், கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் பீரங்கிகளை பொலிஸார் பயன்படுத்தியதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொறுப்பு வாய்ந்த பொலிஸ் அதிகாரிகளால் கருத்து சுதந்திரம், ஒன்றுகூடும் அடிப்படை உரிமை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு உயர்நீதிமன்றத்தில் மனுதாரர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கடத்தப்பட்ட கார் மீட்பு!




கொழும்பு, மார்ச் 02

காலி, பொத்தல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து திருடப்பட்ட கார் ஒன்றை, எல்பிட்டிய, ஜம்புகஹஹேன கந்த பிரதேசத்தில் வீதியொன்றில் கைவிட்டுவிட்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் குறித்த கார் கடத்தப்பட்டதுடன், காரின் உரிமையாளர் அல்பிட்டிய பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளார்.

அதன்படி, எல்பிட்டிய மற்றும் ஊரகஸ்மன்ஹந்திய பொலிஸ் நிலையங்களில் இரண்டு பொலிஸ் குழுக்கள் நேற்று அதிகாலை முதல் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதன்படி செயல்பட்ட பொலிஸார், கடத்தப்பட்ட காரை விரட்டிச் சென்றனர்.

அதேநேரம் காரை கடத்தியவர்கள் எல்பிட்டிய அளுத்கம பிரதான வீதியில் உரகஸ்மன் சந்தியை நோக்கிச் சென்று வாகனத்தை நவதாகலை ஜம்புகஹஹேன பகுதியில் உள்ள குன்று பகுதியில் மறைத்து விட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரை கடத்தும் போது, அதன் ரயர் ஒன்றும் வெடித்து சிதறியதால், பொலிஸார் காரை துரத்திச் சென்றபோது, அதை பொருட்படுத்தாமல் கொள்ளையர்கள் ஓட்டிச் சென்றது தெரிய வந்தது.

(அ)

# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி ஏற்பாடு குறித்து கலந்துரையாடல்

மன்னார், மார்ச் 02

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வினை முன்னிட்டு முன் ஆயத்த நடவடிக்கை தொடர்பான இறுதி கலந்துரையாடல் நேற்று முன் தினம் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயப் பரிபாலன சபை உறுப்பினர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற உள்ள மகா சிவராத்திரி நிகழ்வு தொடர்பாகவும், முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர், உணவு தங்குமிட ஏற்பாடுகள், பாதுகாப்பு உள்ளடங்களாக முன்னெடுக்க வேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

(அ)

# முன்னாள் ஜனாதிபதியின் இல்லம் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்துக்கு இடைக்கால தடை

கொழும்பு, மார்ச் 02

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய, கொழும்பு பெஜட் வீதியில் அமைந்துள்ள இல்லத்தை, அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னரும் பயன்படுத்த ஏதுவாக அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரியந்த ஜயவர்தன, காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதி, குறித்த அமைச்சரவை தீர்மானமானது பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் பங்கேற்றிருந்த போதே மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும், அது இயற்கை நியதிகளுக்கு எதிரான செயற்பாடு எனவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுக்கமைய தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக நீதியரசர்கள் குழாம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்தை இடைநிறுத்தி நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

(அ)

# வடக்கு மாகாண சனசமூக நிலைய பிரதிநிதிகள் ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 02

வடக்கு மாகாணத்திலுள்ள சனசமூக நிலைய பிரதிநிதிகளை ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் நேற்று முன் தினம் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் சந்தித்து கலந்துரையாடினார்.

குறிப்பாக சமூக நிலையிலிருந்து தற்போது மக்கள் மாறிவரும் போக்கு காணப்படுகிறது. எனவே மக்களை மீண்டும் சமூகமயமாக்கும் நோக்கத்தில் குறித்த சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் தமக்கு ஏற்படுகின்ற பிரச்னைகளை தாமே இனங்கண்டு அதனை ஏற்றுக் கொண்டு அவற்றை சமூகமாக இணைந்து தீர்வு காணும் வகையில் செயற்படுவதற்கான வழிமுறைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்தார்.

மக்கள் தற்போது பல்வேறு வகையான பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இருப்பினும் சில பிரச்னைகளுக்கு தாமே தீர்வினை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்வந்துள்ளனர்.

அத்துடன் வழி தவறிப் போகின்ற இளைஞர்களை அதிலிருந்து மீட்டு நல்வழிப்படுத்துவதும் சமூகத்தின் பொறுப்பு என்றும், அது தொடர்பிலும் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் இதன்போது கேட்டுக் கொண்டார்.

பொதுமக்கள் அரச ஊழியர்களை தேடிச் செல்லும் நிலையில் அரச ஊழியர்கள் பொது மக்களைத் தேடிவரும் வகையிலான வடக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடு வரவேற்கத்தக்கது என கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

ஆளுநர் ஒருவர் கிராமத்திற்கு வருகைதந்து மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பிலே சிலவற்றிற்கு உடனடி தீர்வுகளை வழங்கியும் ஏனையவை தொடர்பிலே கரிசனை செலுத்துவதும் முதல் தடவையாக இடம்பெறுவதாகவும் இதற்கு பொதுமக்களாகிய தாமும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் கிராம மக்களால் 15 வகையான பிரச்னைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சிலவற்றுக்கு தீர்வுகளும் ஆளுநரால் முன்வைக்கப்பட்டது.(அ)

# சட்டவிரோதமாக வேப்பமர குற்றிகள் ஏற்றியவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 02

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக 09 வேப்பமரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற ஒருவர் கைதடி பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 694 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 611 நோயாளர்கள் ஆண்களாவர்.

மேலும் 2022 ஆம் ஆண்டில் 607 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு திடீர் உயர்வு

## அனுரவின் இந்திய பயணத்தால்

கொழும்பு, மார்ச் 02

**தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் விருப்பம் மேலும் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.**

**சுகாதார கொள்கை நிறுவனம் வெளியிட்ட ஜனவரி மாத கருத்துக் கணிப்பு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.**

தேசிய மக்கள் சக்திக்கு 40 வீத மக்களின் அங்கீகாரமும், ஐக்கிய மக்கள் சக்திக்கு 30 வீத மக்களின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு 6 வீதமும், பொதுஜன பெரமுனவுக்கு 8 வீதமும் மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் தேசிய மக்கள் சக்தியின் புகழ் ஒரு வீதத்தால் அதிகரித்துள்ள அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் புகழ் மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்த கருத்துக் கணிப்பு 15,590 பேரிடம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலானது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் பிரபல்யமும் ஜனவரி மாதத்தில் அதிகரித்துள்ளது.

அனுரகுமார திஸாநாயக்கவின் இந்திய பயணம் அவருக்கு மேலும் பிரபல்யத்தை தேடித்தந்துள்ளதுடன், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கையும் நாட்டில் அதிகரிக்கச் செய்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்து புற்றுநோய் மருந்துப் பொருட்கள் இறக்குமதி

## மருந்தக உரிமையாளர் சங்க தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 02

புற்று நோயாளர்களுக்காக கொண்டுவரப்படும் மருந்துகளில் 60 வீதமானவை பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்து பெறப்படுவதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கன்கந்த இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

புற்று நோய் மருந்துகளை கொள்வனவு செய்யும்போது, மருந்துகள் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்வனவு செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரம் தொடர்பில் பரிசீலிக்க இலங்கையில் ஆய்வகமொன்று இல்லாதமை இதற்கான பிரதானமான காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை உட்கொள்வதினால் அவை, நோயாளியின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை எனவும், விசேடமாக மஹரகம புற்று நோய் வைத்தியசாலைக்கு அருகில் இவ்வாறான தரமற்ற மருந்து விற்பனை இடம்பெற்று வருவதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# எரிபொருள்களின் விலை மார்ச்சில் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 02

மார்ச் மாதத்துக்கான எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாதாந்த விலை சூத்திரத்தின்படி, திருத்தம் செய்யப்பட்ட எரிபொருள் விலைகள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு அறிவிக்கப்பட இருந்தது.

இருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மார்ச் மாதத்துக்கான எரிபொருள் விலையை ஏற்கனவே இருந்த விலையில் வைத்திருக்க முடிவு செய்துள்ளது.

இதற்கிடையில், லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் ஆகியவை மார்ச் மாதத்துக்கான எரிபொருள் விலையில் திருத்தம் தொடர்பாக எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுமியை கொடூரமாக தாக்கிய குற்றச்சாட்டில் பெற்றோர் கைது!

கொழும்பு, மார்ச் 02

ரிதிமாலியத்த பகுதியில் சிறுமியைக் கொடூரமாக தாக்கிய சகுற்றத்தில் சிறுமியின் பெற்றோர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

ரிதிமாலியத்த பகுதியைச் சேர்ந்த பெற்றோரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெற்றோரால் தாக்கப்பட்ட 3 வயது சிறுமி மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ரிதிமாலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு மத்திய வங்கி அதிகாரிகள் அழைப்பு

கொழும்பு, மார்ச் 02

கட்சி தலைவர்கள் கூட்டத்துக்கு இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் அழைக்கப்படவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகள் கொள்வனவு;

# ஏனைய சந்தேக நபர்களை உடன் கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மார்ச் 02

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் குப்பிகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் எஞ்சிய சந்தேக நபர்களை 14 நாட்களுக்குள் கைது செய்யுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் பல முதன்மை சந்தேக நபர்களை அவதானித்துள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

இந்த முதன்மை சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை என்று அவர் கூறினார். மாறாக மற்ற நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில், சந்தேக நபர்களை 14 நாட்களுக்குள் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து சந்தேகநபர்கள் தொடர்பிலான பிணை உத்தரவு அன்றைய தினம் அறிவிக்கப்படும் எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கின் 9ஆவது சந்தேக நபராக டாக்டர் ஜயநாத் புத்பிட்டிய நீதிமன்றத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளார். ஆய்வுக்கு உட்பட்ட மருந்துகளை கொள்முதல் செய்யும் தொழில்நுட்பக் குழுவில் அவர் உறுப்பினராக இருந்தார். சந்தேக நபர் தற்போது வெளிநாட்டில் இருப்பதால் சர்வதேச பொலிஸாரால் சந்தேக நபரை கைது செய்ய ஆங்கிலத்தில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் நிரூபிக்கப்பட்டால் பிடியாணை இன்றி கைது செய்ய முடியும் என நீதவான் தெரிவித்துள்ளார்.

சமன் ரத்நாயக்க மற்றும் விஜித் குணசேகர ஆகியோரின் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும், அவர்கள் இந்த வழக்கில் சாட்சிகளா அல்லது சந்தேக நபர்களா என்பதை நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பிலான சதித்திட்டம் தொடர்பான உண்மைகளை அரசு தரப்பு முன்வைக்கவில்லை என குறிப்பிட்ட நீதிமன்றம், உண்மைகளை எதிர்வரும் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை கடந்த விசாரணை திகதியில் நீதிமன்றில் ஆஜர்படுத்தாமை தொடர்பில் சிறைச்சாலை வைத்தியசாலை வழங்கிய வைத்திய அறிக்கை பொய்யானது என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் அறிவித்தார்.

முன்னாள் அமைச்சரின் உடல் நிலை தொடர்பில் ஏழு பேர் கொண்ட வைத்திய நிபுணர்கள் குழு வழங்கிய அறிக்கைகளின் பிரகாரம் இது தெளிவாக உள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டார்.

சந்தேகநபர்கள் அனைவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# கெஹலியவை சந்திக்க சிறைக்கு சென்ற மகிந்த

கொழும்பு, மார்ச் 02

தரமற்ற மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச் சந்திப்பு, 30 நிமிடங்களுக்கு மேல் நடைபெற்றதாக செய்திகள் வெளியிடப்பட்டாலும், இதன் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இது வரை எந்தவொரு விடயமும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, தான் கைது செய்யப்பட்டதற்கு எதிராக, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். (அ)

# நெக்டா நிறுவன ஊழியர் மீது முள்ளியவளையில் தாக்குதல்

முல்லைத்தீவு, மார்ச் 02

நெக்டா நிறுவன ஊழியர் மீது முள்ளியவளையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி இரண்டு கடற்றொழிலாளர்கள் முள்ளியவளை முறிப்பு குளத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்ததை நெக்டா நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் அவதானித்துள்ளார்.

அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்ட வேளை, நெக்டா நிறுவன ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதனையடுத்து, காயமடைந்த நெக்டா நிறுவன ஊழியர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# நாட்டு மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு ஆட்சி மாற்றமே!

## ஜே.வி.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 02

**நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



இதற்கமைய அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டில் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. எனவே செப்ரெம்பர் மாதத்தின் இறுதியில் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மேலும், நாட்டு மக்கள் இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாதுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்கள் போஷாக்கு குறைப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

அதேபோல், வரிகொள்கை காரணமாக நாட்டின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறம் மருந்து மோசடி இடம்பெறுகின்றது. இவற்றை கடந்து மக்களுக்க சிறந்த வாழ்க்கை முறைமையை ஏற்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தினையே எதிர்ப்பார்த்துள்ளனர்-என்றார். (அ)

# மியன்மார் பயங்கரவாதிகளிடம் சிக்கிய இலங்கையர்களை மீட்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 02

மியன்மாரில் பயங்கரவாதிகளிடம் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்குமாறு கோரி மகஜர் ஒன்று மியன்மாருக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள மகாநாயக்க தேரர்களால் மியன்மார் மகாநாயக்க தேரர்களுக்கு இந்த மகஜர் அனுப்பிவைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

குறித்த மகஜருக்கு அமைய, மியன்மார் மகாநாயக்க தேரரின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண மியன்மார் அரசாங்கம் தலையிடும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# நிறப்பூச்சு ஆலையில் தீ!

கொழும்பு, மார்ச் 02

பாணந்துறை வடக்கு, சமகி மாவத்தை பகுதியில் அமைந்துள்ள நிறப்பூச்சு தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தில் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மொரட்டுவை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைத்துள்ள நிலையில்,

இந்த தீ விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயினால் ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்படவில்லை என்பதுடன், தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (அ)

# சம்பிக்கவுடன் மனோ சந்திப்பு; கூட்டணி குறித்து பேசவில்லை!

கொழும்பு, மார்ச் 02

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டிற்காக ஒன்றிணைவோம் எனும் மனிதநேய கூட்டணியை அமைப்பது தொடர்பாக நாம் கடந்த வாரம் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்திருந்தோம்.

இது தொடர்பாக நாம் பல அரசியல் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

அவர்கள் தமது இணக்கப்பாட்டை தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.

அந்தவகையில் நாம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட குழுவினரை சந்தித்திருந்தோம்.

நாட்டை நெருக்கடியில் இருந்து விடுவிப்பது தொடர்பாக கலந்துரையாடினோம் என பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணி சார்பில் வெளியிடப்பட்ட அரசியல், சமூக பார்வை தொடர்பான ஆவணங்களை அதன் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தங்களிடம் கையளித்தாகவும் மனோ கணேசன் தெரிவித்தார். (அ)

# இறுதி ஆசை நிறைவேறாமலேயே சாந்தனின் உயிர் பிரிந்ததால் தமிழர் இதயங்களில் கனம்!

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 02

தமிழர் தேசக் கனவோடு தாயகம் பிரிந்து, இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, முழுமை பெறாத நீதி விசாரணையால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து தாயகம் காண காத்திருந்த தில்லையம்பலம் சுதந்திரராஜா எனும் இயற்பெயருடைய சாந்தன் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் தாயையும் தாய் மண்ணையும் காணவேண்டும் என்னும் இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர்பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சாந்தனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் - மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தன் அவர்களின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில்க் கூட மகன் வருவான் என்று கோவில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்!

ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களின் பின்னர் 11.11.2022 ஆம் திகதி இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாக தொடர்ந்து 15 மாதகாலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உள ரீதியாய் பலவீனப்படுத்தி சிறுகச் சிறுகச் கொன்று தாயையும் தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாய் அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களிற்கு எதிராகச் செயல்பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் சிறிலங்கா அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களிற்காக தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைக் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரை காலமும் தான் கொண்ட வரலாற்றிற்கும் பெருமைகளிற்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர் கொண்டு, புரியும் கொடுரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வை களைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தன் அவர்களை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்!

சாந்தன் அவர்களைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாத காலத்திற்குள் காணப்பட்ட ஏதுநிலையை குறிப்பிட்ட சில காலங்களிற்கு முன்னதாக வேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தால் கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம்.

ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஓராண்டு காலப்பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்கரமான தீர்மானங்களெதனையும் மேற்கொள்ளாமல், அசமந்தமாகவும் அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்திற்குரியதொன்று.

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாக சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத் தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமிற்கு இனியாவது முடிவுரையெழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்-எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 8 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் கைது

கொழும்பு, மார்ச் 02

8 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சாவுடன், நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருவன்வெலிசாய விஹாரைக்கு முன்னால் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே, குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் வழிபாட்டுத் தல பகுதியில் விநியோகம் செய்யும் நோக்கத்தில், இந்த கஞ்சா கொண்டுவரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா, 4 கிலோ 250 கிராம் எடை கொண்டது என தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலவச கண் பரிசோதனை முகாம் சாவகச்சேரியில்!

யாழ்ப்பாணம், மார்ச் 02

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவுசெய்யும் கண்பரிசோதனை முகாம் இன்று காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ)

# அம்பாறையில் குரங்குகளின் தொல்லையால் மக்கள் சிரமம்

அம்பாறை, மார்ச் 02

**குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள் விவசாயிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

தினமும் கொத்தணியாக 300 இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடி வருவதுடன் இவ்வாறு அதிகரித்து வருகின்ற குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் பொதுமக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு, மணல்சேனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, மத்தியமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர் ,அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், இறக்காமம், பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெற்களை சேதப்படுத்துவதும் வியாபார கடைகளில் காட்சிபடுத்தபட்டுள்ள பொருட்களை நாசப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களையும் உண்டு வீணாக்குவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இது தவிர இம்மாவட்டத்தில் வீதிகளில் செல்கின்ற பாதசாரிகள் வாகனங்களின் போக்குவரத்தினை குரங்கு கூட்டங்களாக வீதியின் நடுவில் சஞ்சாரம் செய்து தடுத்து வருகின்றன. இதனால் பல விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.மேலும் இப்பிரதேச மக்கள் பொருட்களை எடுத்துசெல்லும் போது கைகளில் உள்ள உணவு பொதிகளை பிடுங்குவதாகவும் இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பல இடர்களை சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியோரங்களில் மட்டுமல்லாமல் சில சமயம் ஊருக்குள்ளும் குரங்குகள் வந்துவிடுகின்றன.

இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பொலிஸார் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

## பிரதேச செயலகத்தால் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



அம்பாறை, மார்ச் 02

சிறுவர் கழகங்களை மேம்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்துக்கு கரம் போட் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்நிகழ்வில்

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். எஸ். எச்.சியாத் ஆகியோர் இணைந்து பாடசாலை மாணவர்களிடம் வழங்கினர். இதில் பிரதி அதிபர் உட்பட ஆசிரியர்களும கலந்து கொண்டனர். (அ)



## கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கு விழிப்புணர்வு

அம்பாறை, மார்ச் 02

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி உயர்தர மற்றும் மாணவர் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி அதிபர் எம்.ஐ ஜாபீர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்சிக்கு அதிதியாக சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம். ஏ. மலீக் கலந்து கொண்டார்.

இதில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம் ஸாஜீத், எம்.எச்.எம் றிபாஜ் ஏ. பீ.எம் றிப்சாத், ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியார்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (அ)

## அக்கரைப்பற்று இராமகிருஷ்ண கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்




அம்பாறை, மார்ச் 02

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள அக்கறைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண கல்லூரியில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் க.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்கக்கூடாது என்றும் “எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்” எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் சி.மதியழகன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.பி. அகிலன், பழைய மாணவர் சங்க உறுப்பினர் வி. சுகிர்தகுமார், எல். லக்மிகாந், பாடசாலை ஆசிரியர்களான செவ்வேல் குமரன், சுதர்சன், கின்ஸ்லி, சத்தியராஜ், அற்புதநாதன், திருமதி எல். திருச்செல்வம், திருமதி எம். ஜீவிதா, பாடசாலை உத்தியோகத்தர்களான எம்.எம் பத்திமா ரோசானா, திருமதி கே. கிரியாழினி, இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், சி.காந்தன், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பெரிய நீலாவணையில் பாடசாலை வான் மோதி 4 வயது சிறுவன் பலி!

அம்பாறை, மார்ச் 02

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஷ்ணு வித்தியாலய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் மோதியே இந்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு கல்முனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை திங்கட்கி ழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் வீட்டின் கதவு தற்செயலாக திறந்த நிலையில் வீதியை நோக்கி ஓடியுள்ளான்.

அவ்வேளை அவ்வழியால் வந்த பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் மோதியதில் படுகாயமடைந்த சிறுவனை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற நிலையில் உயிரிழந்துள்ளான். (அ)

# தென்கிழக்கு பல்கலையில் இரண்டு நூல்கள் வெளியீடு

அம்பாறை, மார்ச் 02

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் இரு முக்கிய நூல்களின் அறிமுக மற்றும் வெளியீட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக ஒலுவில் வளாக, கலை, கலாச்சார பீடகலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் “ஸிஹாஹ் ஸித்தா” ஹதீஸ் கிரந்தங்களின் தமிழ் மொழிபெயர்ப்புத் தொகுதி நூல் அறிமுகமும் “மீஷ்காத்துல் மஹாபீஹ்” தமிழ் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தமிழ் நாடு ரஹ்மத் பதிப்பகம் நடத்தும் மேற்படி முக்கிய நூல்களின் அறிமுக மற்றும் வெளியீட்டு நிகழ்வுபல்கலைக்கழக கலை, கலாச்சார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரின் தலைமை உரையினைத் தொடர்ந்து, இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீட பேராசிரியர் அஷ்ஷெய்ஹ் எஸ்.எம்.எம். மஸாஹிர், சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் தலைமை இமாம் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி, புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூத் தலைமை இமாம் ஹாபிழ் ஏ.பீர் முஹம்மது பாகவி மனித நேய ஜனநாயகக் கட்சி தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.தமீமுன் அன்சாரி ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

மேலும் நூல்களின் சிறப்புப் பிரதிகளை நிகழ்வில் தமிழ்நாடு ரஹ்மத் பதிப்ப நிறுவனர் எம். ஏ.முஸ்தபா, பல்கலைக்கழக உபவேந்தர், இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி பீடபீடாதிபதி, நூலகர் உட்பட முக்கியஸ்தர்களுக்கும் வழங்கி வைப்பார்.

நிகழ்வுக்கான சிறப்பு ஏற்பாடுகளை நெறிப்படுத்தியுள்ள பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நன்றியுரை பகர்வதுடன்,

சர்வதேசப்புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் நிகழ்வுகளை நெறிப்படுத்தியும் வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-06)

# தரைப்படைகள் தலையிட்டால் அணு ஆயுதப் போர் சாத்தியம்!

## புடின் எச்சரிக்கை!!

பாரிஸ், பெப். 02

**மேற்கு நாடுகள் தங்களது சொந்தப் படைகளை உக்ரைனுக்கு அனுப்பினால் நிஜமான அணு ஆயுதப் போர் சாத்தியம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அந்த நாடுகளை எச்சரித்திருக்கிறார்.**



மேற்கு நாடுகளது இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கக் கூடிய போராயுதங்களை ரஷ்யா கைவசம் வைத்திருக்கின்றது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ரஷ்ய நாடாளுமன்றத்துக்கும் நாட்டின் அரசியல் உயர் மட்டப் பிரதிநிதிகளுக்கும் ஆற்றிய வருடாந்த உரையிலேயே புடின் மேற்குலகை இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

உக்ரைன் மீதான படை நடவடிக்கை தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டே ரஷ்ய அதிபரது இந்த உரை வெளியாகி இருக்கின்றது என்று மொஸ்கோவில் உள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புடின் தனது உரையில் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு :

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை பலவீனப்படுத்துவதில் குறியாக உள்ளன, ரஷ்யாவின் சொந்த உள் விவகாரங்களில் தலையிடுவது எவ்வளவு ஆபத்தானது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

அவர்களது எல்லைகளில் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய ஆயுதங்கள் நம்மிடம் உள்ளன என்பதை உணரவேண்டும். அவர்களது தலையீடுகள் அனைத்துமே மனித நாகரீகத்தையே அழிக்கவல்ல அணு ஆயுதங்களின் பயன்பாட்டுக்கு வழிவகுக்கிறது. அது அவர்களுக்குப் புரியவில்லையா?

-இவ்வாறு புடின் கேள்வி எழுப்பி உள்ளார்.

நேட்டோவின் ஐரோப்பிய உறுப்பு நாடுகள் தங்களது தரைப்படையை உக்ரைனுக்கு அனுப்புவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்ற சாரப்பட

பரபரப்பான கருத்தை வெளியிட்ட ஓரிரு தினங்களிலேயே மேற்குடனான அணு ஆயுத மோதல் பற்றிய இந்த எச்சரிக்கை புடினிடம் இருந்து வந்திருக்கிறது.

71 வயதான அதிபர் புடின், மார்ச் 15-17 திகதிகளில் நடைபெறவுள்ள ரஷ்ய அதிபர் தேர்தலில் மேலும் ஆறு வருடங்களுக்கு அதிபராகத் தெரிவாகுவது நிச்சயமான ஒன்றாகும்.

இந்த நிலையில் ரஷ்யா வசம் உள்ள- நவீன முறைகளில் புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட - அணு ஆயுதங்கள் உலகிலேயே மிகப் பெரியவை என்று தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# 112 சுகாதார பணியாளர்கள் காஸாவில் சுட்டுக்கொலை!

## சமாதானத்தை குழப்பும் செயல் என குற்றச்சாட்டு

ஜெருசலேம், மார்ச் 02

பலஸ்தீனிய சுகாதார பணியாளர்களை இஸ்ரேல் இராணுவம் நேற்று வியாழக்கிழமை சுட்டுக்கொன்றுள்ளதாக குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

காஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக காத்திருந்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது 112 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 280 பேர் காயமடைந்துள்ளதாக பலஸ்தினிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஒரே வாரத்தில் அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தாக்குதல் சம்பவமானது சமாதான பேச்சுவார்த்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கைவிடுத்துள்ளது.

இதேவேளை குறித்த சம்பவம், சமாதான பேச்சுவார்த்தைக்கு பாதிப்பை ஏற்படுத்துமான என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் கேட்டபோது, பாதிப்பை ஏற்படுத்தலாம் என பதிலளித்துள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களில் இதுவரை 30000 வரை காசாவில் உயிரிழந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)



# பங்களாதேஷில் பெரும் தீ விபத்து!

## உடல் கருகி 43 பேர் சாவு!!

டாக்கா, மார்ச் 02

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் அமைந்துள்ள ஏழு மாடி கட்டடத்தில் நேற்றிரவு ஏற்பட்ட தீப்பரவலில் 43 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் ஏழு மாடி கட்டடம் ஒன்றின் முதல் தளத்தில் உணவகம் ஒன்று செயல்பட்டு வந்துள்ளது. இந்த உணவகத்தில் நேற்று முன் தினம் இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ அனைத்து மாடிகளுக்கும் பரவியது. அந்த கட்டடத்தில் மேலும் சில உணவகங்கள், ஆடையங்கள் செயல்பட்டு வந்துள்ளன.

35இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைத்தனர். தீயணைப்பு வீரர்கள் கட்டடத்தில் சிக்கித் தவித்த 75 பேரை உயிருடன் மீட்ட நிலையில், அதில் 42 பேர் மயக்க நிலையில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தில் 43 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

22 பேர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)



# 24 மணி நேரத்தில் தாய்வானை வட்டமிட்ட 19 சீன விமானங்கள்

## பெப்ரவரியில் மட்டும் 150 முறை ரோந்து சென்ற போர் கப்பல்கள்

தாய்பேய், மார்ச் 02

கடந்த 24 மணி நேரத்தில் 19 சீன இராணுவப் போர் விமானங்கள் மற்றும் 7 கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்கு அருகில் ரோந்து சென்றதாக தாய்வானின் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் நடவடிக்கைக்கு பின்னர்,தாய்வான் இராணுவம், விமானப்படை விமானங்கள், கடற்படை கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகளை நிலைநிறுத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் சீனாவின் போர் விமானங்கள் 253 முறையும் கடற்படை கப்பல்கள் 150 முறையும் தாய்வானின் வான்பரப்பு மற்றும் கடற்பரப்பில் ரோந்து சென்றதாக தாய்வான் கூறியுள்ளது.



2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல், தாய்வான் அருகில் சீனா தொடர்ந்து தனது இராணுவ ஊடுருவல்களை மேற்கொண்டு வருகிறது.

தாய்வானில் ஊடுருவுவதை மறைக்க சீனா இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்கக்கூடும் என அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் கடற்படை தளபதி அட்மிரல் சாமுவேல் பாப்பரோ தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு அருகில் உள்ள தீவு நாடான தாய்வான்,தன்னை ஒரு சுதந்திர நாடு என கூறி வருகிறது. எனினும் தாய்வான் தனக்கு சொந்தமானது என சீனா கூறிவருகிறது.

தைவான் 1996 முதல் தேர்தலை நடத்தி அதன் ஜனநாயக ரீதியான அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துள்ளது.

தாய்வானின் மிகப்பெரிய ஆதரவாளராகவும் நட்பு நாடாகவும் அமெரிக்கா இருந்து வருகிறது.

இருநாடுகளும் உத்தியோக பூர்வ இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தாய்வானுக்கு தேவையான ஆயுதங்கள் அமெரிக்காவால் வழங்கப்படுகின்றன. (அ)

# உலகளவில் அதிகரித்துள்ள உடல் பருமன்

நியூயோர்க், மார்ச் 02

உலகம் முழுவதும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதிக பருமனாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகளவில் 220 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் தரவுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி இது தெரியவந்துள்ளது.

1990 மற்றும் 2022 க்கு இடையில், பருமனான பெரியவர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளது, மேலும் 5 முதல் 19 வயதுடைய பருமனான குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகமாக உள்ளது.

இதற்கு முன்னர் பணக்கார நாடுகளில் உடல் பருமன் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உடல் பருமனால் பாதிக்கப்பட்டவர்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து கைதாகி

# பிணையில் விடுவிக்கப்பட்ட நால்வர் உட்பட 30 பேர் கைது!

அம்பாறை, மார்ச் 02

**காத்தான்குடியில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக ஒன்று கூடி கூட்டமொன்றை நடத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸஹ்ரான் ஹாசிமின் சகோதரியின் கணவர் மற்றும் 4 பேர் உட்பட 30 பேரை சந்தேகத்தின் பேரில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.**

புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றிற்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி எனப்படும் ஸஹ்ரான் ஹாசிமின் சகோதரியின் கணவர் மற்றும் காத்தான்குடியில் 2017-3-10 திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்த ஸஹ்ரான் பிரிவினைச் சேர்ந்த 3 பேர் உட்பட 30 பேர் ஒன்றுகூடிய நிலையில் நேற்று அதிகாலை 2 மணிக்கு பொலிஸார் சுற்றிவளைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் ஸஹ்ரான் ஹாசிமின் கொள்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒன்று கூடினார்களா என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தேசிய புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## சட்ட நிவாரண திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கினார் புதிய பொலிஸ்மா அதிபர்




கொழும்பு, மார்ச் 02

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சட்ட உதவி வழங்கும் சட்ட நிவாரணத் திட்டத்திற்கு புதிய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ இதனை தெரிவித்தார்.

பொலிஸார் தங்கள் கடமைகளைச் செய்யும் போது எதிர்கொள்ளும் சட்டச் சிக்கல்களுக்காகத் தனிப்பட்ட சட்ட உதவியைப் பெற இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பிரேரணை பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது கடமைகளின் எல்லைக்குள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட சிக்கல்களுக்கு முகங்கொடுக்கும் பட்சத்தில் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கு அரசாங்க சட்ட உதவியை வழங்க மறுக்கும் அல்லது அது தொடர்பான சட்ட உதவிகளை வழங்காத சந்தர்ப்பங்களில், ஒரு தனியார் சட்டத்தரணி மற்றும் பிற சட்ட சேவைகளின் உதவியைப் பெறுவதற்கு பொலிஸார் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகளுக்கு இந்த முறை நிவாரணமாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மலையக அபிவிருத்தி திட்டம் குறித்து இந்தியத் தூதுவருடன் ஜீவன் சந்திப்பு!



கொழும்பு, மார்ச் 02

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும், இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகவும், சமகால நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் மலையக மறுமலர்ச்சிக்காக இந்தியா வழங்கி வரும் அபிவிருத்திசார் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மாணவர்களுக்கு இந்தியா வழங்கிவரும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை, இந்தியாவுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதில் மலையக மக்களுக்குரிய வகிபாகம் பற்றியும், குறிப்பாக பாரத் - லங்கா வீட்டு திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இவ்வருடத்திற்குள் கொண்டுவர திட்டம்

### இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்



கொழும்பு, மார்ச் 02

தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இவ்வருடத்திற்குள் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் சைபர் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவவுள்ளதாகவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

டிஜிற்றல் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், டிஜிற்றல் பொருளாதார மாநாட்டை ஜூலை மாத இறுதியில் இலங்கையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் 4.73 வீதமாக காணப்பட்ட டிஜிற்றல் பொருளாதாரம் இன்று 5% வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. அதனால் பொருளாதாரமும் வலுவடைந்திருக்கிறது. அதனை மேலும் பலப்படுத்தும் வகையிலேயே டிஜிட்டல் பொருளாதார மாநாடு ஜூலை மாத இறுதியில் இலங்கையில் நடத்தப்படவுள்ளது. அதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை வெளிநாட்டு தூதரகங்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

கடந்த வருடத்தில் இலங்கை கட்டளைகள் நிறுவனம் 50 மில்லியன் ரூபா இலாபத்தை திறைசேரிக்கு வழங்கியிருந்தது. அதன்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமை, நாட்டின் பொருளாதாரத்திற்கு 52 வீத பங்களிப்பை வழங்கும் சிறு மற்றும் மத்தியத் தர தொழில் துறையைப் பலப்படுத்த புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் இலங்கை சர்ட் நிறுவனத்தின் ஊடாக தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டம் இவ்வருடத்திற்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதனையடுத்து சைபர் பாதுகாப்பு அதிகார சபையும் விரைவில் நிறுவப்படும்.

அத்தோடு, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கல்வி அமைச்சின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகள் அற்ற 1000 பாடசாலைகளில் 700 பாடசாலைகளுக்கு இணைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் கல்வி அமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப அறிவைப் பெறாமலிருக்கும் 10,000 பட்டதாரிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்கும் வேலைத்திட்டம் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது-என்றார். (அ)

## பாடப் புத்தகங்களை பகுதிகளாக அச்சிடுவதற்கு அரசு நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 02

பாடசாலை மாணவர்களின் புத்தகப் பையின் நிறை அதிகரிப்பினால் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் முள்ளந்தண்டு உள்ளிட்ட பல பிரச்னைகளை குறைப்பதற்கு பாடசாலை அதிபர்களுக்கு கல்வியமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடப்புத்தகங்களை பகுதிகளாக அச்சிடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேராவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செயல்நூல்கள் தவிர்ந்த ஏனைய பாடப்புத்தங்களை பாடசாலைக்கு கொண்டு வருவதை குறைப்பதற்கு அதிபரின் நேரடி கண்காணிப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் குறித்த சுற்றிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## லிட்ரோ எரிவாயு விலையும் மாறாது

கொழும்பு, மார்ச் 02

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய இம்மாதத்திற்கான சமையல் எரிவாயு விலைத் திருத்தத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதுள்ள எரிபொருள் விலையை திருத்தம் இன்றி மார்ச் மாதத்திலும் தொடர்ந்து பராமரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

## சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு 342 மில்லியன் டொலர்கள் வருமானம்!

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

கொழும்பு, மார்ச் 02

கடந்த ஜனவரி மாதத்தில், சுற்றுலாத்துறையின் ஊடாக 342 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் இது கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் பதிவான மாதம் ஒன்றின் அதிகூடிய சுற்றுலாத்துறை வருவாய் என இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 269 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சுற்றுலாத்துறையின் ஊடாக வருமானமாக ஈட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சாவகச்சேரி...

பரணிதரன் (வயது 18) என்ற மாணவனே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பய ணித்த இ. போ. ச. பேருந்தே நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இந்த விபத்தை ஏற்படுத்தியது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயரிழந்தார்.

விபத்துக் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இ.போ.ச...

மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸால் இந்தக் குழு அமைக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து தூர இடங்களுக்கான சேவை வழங்கும் தனியார் பேருந்துகள் வழக்கமாக தரித்து நிற்கும் இடத்தில் நின்று சேவையாற்ற தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள், சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் அவர்கள் இ. போ. ச. பேருந்து நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விடயத்தில் தலையிட்ட வடக்கு ஆளுநர் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து பிரச்னைகளுக்கு தீர்வு காண குழு ஒன்று அமைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதன் பிரகாரமே ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு புதிய பேருந்து நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் இணைந்த சேவையை வழங்கும் விதத்தில் நேர அட்டவணையை தயாரிக்கவுள்ளது. அத்துடன், போக்குவரத்து பிரச்னை தீர்வுக்கு சில பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளையும் வழங்கவுள்ளது. இவற்றை ஒரு வாரத்துக்குள் ஆளுநரிடம் சமர்பிக்க வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ளது. (ஐ-2)

## சாந்தனின்...

உட்படுத்தப்படவேண்டும் என்று விமான நிலைய அதிகாரிகள் அறிவுறுத்தியமையால், நீர்கொழும்பு மருத்துவமனையில் சாந்தனின் உடலம் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் உடலம் இன்று சனிக்கிழமை மதியமளவில் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வவுனியாவுக்கு கொண்டு வரப்படும் சாந்தனின் உடலம் அங்கிருந்து மக்களின் அஞ்சலிக்காக ஊர்தி பயணமாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும்.

சாந்தனின் உடலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இறுதிக் கிரியைகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று தெரிய வருகின்றது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான சாந்தன் 32 வருட சிறை வாசத்தின் பின்னர் கடந்த 2022 நவம்பர் 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். அவர் உட்பட விடுதலையான இலங்கையர்கள் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை வருவதற்காக நீதிமன்றத்தில் சாந்தன் வழக்கு தொடுத்த நிலையில், அவரின் தாயார் சாந்தனின் விடுதலைக்காக பலரையும் சந்தித்து கோரிக்கைளை விடுத்து வந்தார். இந்த நிலையில், அவரை இலங்கைக்கு அனுப்ப ஜனவரி 22ஆம் திகதி இந்திய மத்திய அரசு அனுமதியளித்தது.

இதனிடையே, கல்லீரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்டு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சாந்தன் இலங்கை திரும்பவிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை காலை உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஓ.எல்...

டிசெம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான உத்தேச திகதி வரும் நாட்களில் அறிவிக்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## நயினை...

செய்யப்படவுள்ளன.

இதற்கான உடன்படிக்கையில் மின்சக்தி எரிசக்தி இராஜாங்க அமைச் சர் இந்திக்க அனுரத்தவும் யு - சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன் நிறுவன அதிகாரிகளும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா முன்னிலையில் ஒப்பமிட்டனர். (ஐ)

## பாக்கு நீரிணை...

தனுஷ்கோடியில் ஆரம்பித்த இவரின் நீச்சல் பயணம் மதியம் 2 மணியளவில் தலைமன்னாரில் நிறைவடைந்தது. தலைமன்னாரை அடைந்த தன்வந்தை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி வரவேற்று பாராட்டினார்.

ஹரிகரன் தன்வந்த் திருகோணமலை இந்துக் கல்லூரியின் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுகாதார...

தடுப்பூசி இறக்குமதி விவகாரம் தொடர்பிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய, அவரின் அப்போதைய செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணக்...

'பொன் அணிகளின் போர்' என்று அழைக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளின் பெருந் துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

107ஆவது ஆண்டாக இரு பாடசாலைகள் இடையேயும் நடக்கும் இந்தப் போட்டி இம்முறை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வென்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண கல்லூரி 80.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 189 ஓட்டங்களை குவித்தது.

தொடக்க வீரரான ஆர். ஜோன்சன் 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களை சேர்த்தார். ஏனைய வீரர்கள் குறைந்தளவு ஓட்டங்களையே பெற்றனர். இதில், எமாக்ஸன் 17, அபினாஸ் 15, டெமியன் 17, நர்த்தனன் 14, ஜென்சொன் 25 ஓட்டங்களை சேர்த்தனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் அபிலாஷ், செஹான் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் மதுசன் 2 விக்கெட்களையும் பிரியங்கன், பி. மதுசன் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 17 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் தொடக்க வீரர்களான செஹான் 12, அபிஷேக் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த சியான்சன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

அபிலாஷ் 2 ஓட்டங்களுடனும் ஹறின் அட்ரியான் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

யாழ்ப்பாண கல்லூரியின் பந்துவீச்சில் விஷ்ணுகோபன் வீழ்த்தப்பட்ட 3 விக்கெட்களையும் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் இரண்டாவது மற்றும் இறுதிநாளாகும். (ஐ)

# சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவுக்கு அங்கீகாரம்!

### சுகாதார அமைச்சர் வழங்கினார்

கொழும்பு, மார்ச் 02

சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண நேற்று அங்கீகாரம் அளித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று காலை 72 சுகாதார தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இதற்கான அங்கீகாரத்தை அமைச்சர் வழங்கினார்.

இதற்கமைவாக, கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான யோசனை அறிக்கை நிதி அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன.

இந்தப் பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சரால் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க இடமளிக்கமாட்டோம்

### ஆளும் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 02

சிறீ லங்கா ரெலிக்கொம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் உட்பட அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம். பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு அமையவே ஜனாதிபதி செயல்பட வேண்டும் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவன தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசியல் தரப்பினர் நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை. வெளிநாட்டு முதலீடுகளுக்கு எவ்வித தடைகளையும் நாங்கள் ஏற்படுத்த போவதில்லை. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காமல் தேசிய முதலீட்டாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகள் தனியார் நிறுவனங்களிடம் உள்ள நிலையில் மிகுதியாக உள்ள பங்குகளையும் தனியார் மயப்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளமை பிரச்சினைக்குரியதாகும். மிகுதியாக உள்ள பங்குகளை தேசிய முதலீட்டாளர்களுக்கு வழங்கலாம்.



இலங்கை காப்புறுதி நிறுவனம் இலாபமடைந்துள்ள நிலையில் அதனையும் தனியார் மயப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தேசிய வளங்களை மறுசீரமைப்பது குறித்து சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பூகோள அரசியல் போட்டித்தன்மை நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ள பின்னணியில் போட்டித்தன்மையான நாடுகள் இலங்கையில் அரச நிறுவனங்கள் அல்லது முக்கிய கேந்திர மையங்கள் ஊடாக முதலீடுகளை முன்னெடுக்க விசேட கவனம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவனம் உள்ளிட்ட அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் செயல்பாடுகளுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை. அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது பொதுஜன பெரமுனவின் கொள்கையல்ல. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தான் தெரிவு செய்தோம். ஆகவே, அவர் எமது கொள்கைக்கு அமையவே செயல்படவேண்டும் - என்றார். (ஐ)

## இந்துசமுத்திர...

இந்து சமுத்திரத்தில் நாட்டின் பொருளாதார திட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த இடமளியோம் என்றும் கூறினார்.

திருகோணமலை கடற்படை முகாமில் நேற்று நடந்த கடற்படையின் விசேட கப்பல் படையணிக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

மேலும், இறுதி யுத்தத்தின் போது இலங்கை கடற்படையினர் நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றினர். உயிர்த் தியாகம் செய்தவர்கள் மற்றும் இழக்கப்பட்ட சொத்துகள் தொடர்பிலான குறிப்புக்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. இதேபோல் வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை கடல் பிராந்தியத்தினதும் இந்து சமுத்திரத் தினதும் பாதுகாப்புக்காக கடற்படை அர்பணித்துள்ளது. அது குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையையும் ஏற்றுள்ளோம். இந்து சமுத்திரத்திற்குள் நமது பொருளாதாரத் திட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளியோம்.

மேலும், செங்கடலின் பாதுகாப்பிற்காக நமது கடற்படையை ஈடுபடுத்த தீர்மானித்தோம். 1967 இஸ்ரேல் - அரபு போரின் போது சுயேஸ் கால்வாய் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதனால் 10 வருடங்களாக கொழும்பு துறைமுகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததை நாம் அறிவோம். அதனால் இந்து சமுத்திரம், சுயேஸ் கால்வாய் , செங்கடலின் பாதுகாப்பிற்குமான ஒத்துழைப்புகளை வழங்கி, நமது துறைமுகங்களின் பொருளாதார மதிப்பைப் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும். மேலும், எதிர் காலத்தில் நமது கடற்படை இந்த பணியில் வெற்றிகரமாக செயல்படும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு வழிப்பறிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியைச் சேர்ந்த அவர்கள், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மாலை 6 மணி முதல் இரவு 9 வரையான நேரத்துக்குள் வீதியில் பயணித்தவர்களை இலக்கு வைத்து நீண்ட காலமாக வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளமை முதல்கட்ட விசாரணையின் தெரியவந்துள்ளது.

கைதானவர்கள் பிரதான சந்தேகநபர்கள் என்பதுடன் அவர்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

சந்தேகநபர்கள் பலரிடம் சிறிய தொகைகளைப் பறித்தெடுத்துள்ளனர். ஆனால், சிறிய தொகைதானே என்பதால், அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய பலரும் முன்வரவில்லை.

# பொருளாதார உரிமை மீறப்பட்டால் அதற்கு எதிரான நடவடிக்கை தயார்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு





கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் பொருளாதார உரிமைகள் மீறப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாரென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

செங்கடலில் இலங்கையின் பொருளாதார உரிமைகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அதற்கு எதிரான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுக்கும் என்றும், வலய - உலகளாவிய பிரச்சினைகளின்போது ஐக்கிய நாடுகள் சபையின் வேலைத்திட்டங்களுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை இலங்கை வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

திருகோணமலை சீனக்குடா விமானப்படை தளத்தில் இடம்பெற்ற இலங்கை விமானப்படை கடேட் அதிகாரிகளுக்கு அதிகார ஆணை அளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

வரலாற்று காலத்திலிருந்தே இலங்கை உலக அமைதி, பிராந்திய சமாதானத்தை பாதுகாக்க அர்ப்பணித்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உலக சமாதானத்துக்காக நேரடியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் வேளையில் முப்படையினரின் கடமை மற்றும் பொறுப்புணர்வுகள் எவ்வாறானவை என்பது குறித்தும் நினைவூட்டினார்.

இந்த விடுகை அணிவகுப்பு இலங்கை விமானப்படை வரலாற்றில் முதல் முறையாக இரவு நேரத்தில் நடத்தப்பட்டமை சிறப்பம்சமாகும். (அ)

# இந்திய - இலங்கை கடல் எல்லையில் நாளை நடக்கும் மீனவர் போராட்டம்

## தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 02

**இந்திய இழுவை படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை ஞாயிற்றுக்கிழமை லங்கை கடல் எல்லையில் முன்னெடுக்கப்படவுள்ள கறுப்புக்கொடிப் போராட்டத்திற்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவரான சிறிகந்தவேல் புனித பிரகாஸ் தெரிவித்துள்ளார்.**

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் மாவட்டம், காங்கேசன்துறை, தீவகம், வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து அந்தந்த பகுதிகளில் இப் போராட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளன.

அதேவேளை, யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சம்மேளனமும் யாழ். மாவட்ட கிராமிய அமைப்புக்களின் சம்மேளனமும் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்.மாவட்டத்திலுள்ள படகுகள் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதுடன், அதில் கணிசமான படகுகள் எமது இலங்கை கடற்பகுதியில் இந்திய எல்லைப் பகுதியை முற்றுகையிட்டு போராட்டத்தை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளளோம்.

ஏனைய படகுகள் அந்தந்த பிரதேசங்களிலுள்ள கடல் எல்லை பகுதிகளில் இந்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும்.

கடற்றொழிலாளர்களால் முன்னெடுக்கப்படவுள்ள இப் போராட்டத்திற்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கோரி நிற்பதோடு, கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை பெறுவதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் ஆதரவு தரவேண்டும் - என்றார்.

(அ)

# வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளுடனும் கூட்டணி தொடர்பில் சஜித் அணி பேச்சு

கொழும்பு, மார்ச் 02

"ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைத்து களமிறங்குவது தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

"பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது பற்றி தமிழ்க் கட்சிகள் (வடக்கு) அவதானம் செலுத்தி வருகின்றன. இக்கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படுமா?" என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"மலையகத்தல் உள்ள தமிழ்க் கட்சிகள் எம்முடன் இணக்கத்துக்கு வந்துள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது. கூட்டணி அமைத்தே நாம் களம் இங்குவோம். அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இணைத்துக்கொள்ளப்படும்." எனவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார். (அ)

# பெண்களுக்கான தலைமைத்துவத்தை வடக்கு ஆளுநர் ஏறுக்கொள்ளவேண்டும்

## ஐ.நா சனத்தொகை நிதியம் அழைப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 02

பெண்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்குமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பானத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகங்கள் மீது கவனம் செலுத்தி பாலியல் மற்றும் குடும்ப திட்ட ஆரோக்கியம், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடும் நோக்கில் பணிப்பாளர் பியோ ஸ்மித் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து, மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை குறித்து கலந்துரையாடினார்.

பொலிஸ் நிலையங்களில் பாலின சமத்துவத்தின் அடிப்படையிலான விசாரணை பிரிவை மேம்படுத்துவதற்கான தேவை குறித்தும், தமிழ் பெண் பொலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கான ஆளணி தொடர்பிலும் ஆளுநர் இதன்போது தெளிவுபடுத்தி னார்.

பெண்களுக்கான தொழில் சட்டங்கள் போதுமானதாக இல்லை என தெரிவித்த ஆளுநர், நிறுவனமயப்படுத்தப்பட்ட பாதுகாப்பு பெண்களுக்கு இல்லை எனவும் தொழில் இடங்களில் கழிப்பறை வசதி, உணவு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் பெண்களுக்கு போதுமானதாக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றபோதிலும், அவர்கள் வாழ்வியலை நாடாத்தி செல்வது பெரும் போராட்டமாக அமைந்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார் .

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை தொடர்பில் கேட்டறிந்துக் கொண்ட ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித், இங்குள்ள பெண்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்று, அவர்களுக்கான முன்மாதிரியாக செயல்பட வடக்கு மாகாண ஆளுநருக்கு அழைப்பு விடுத்தார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆஸிக்கு எதிரான டெஸ்ட்:

# 179 ஓட்டங்களுக்கு சுருண்டது நியூசி.

வெலிங்டன், மார்ச் 02

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் நியூசிலாந்து அணி 179 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதே நேரம், கிறீன் குவித்த 174 ஓட்டங்களால் ஆஸி. அணி 216 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.



நியூசிலாந்து - அவுஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா முதல் நாளில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 279 ஓட்டங்கள் அடித்திருந்தது. கிறீன் 103 ஓட்டங்களுடனும் ஹசில்வூட் ஓட்டம் எடுக்காமலும் களத்தில் இருந்னர்.

நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 4 விக்கெட்களும், வில்லியம் ஒ ரூர்க் மற்றும் ஸ்காட் குகெலீஜ்ன் தலா 2 விக்கெட்களும், ரச்சின் ரவீந்திரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியிருந்தனர்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிறீன் - ஹசில்வூட் இணை மேற்கொண்டு 104 ஓட்டங்கள் அடித்து அணிக்கு வலுவூட்டினர். இவர்களில் ஹசில்வூட் 22 ஓட்டங்களில் மேட் ஹென்றி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். கிறீன் 174 ஓட்டங்கள் குவித்த நிலையில் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இவர்கள் இருவரும் இணைந்து கடைசி விக்கெட் இணைப்பாட்டமாக 116 ஓட்டங்கள் குவித்திருந்தனர்.

நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக மேட் ஹென்றி 5 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி அவுஸ்திரேலிய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 179 ஓட்டங்களில் சுருண்டது.

அந்த அணியில் அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 71 ஓட்டங்களும், மேட் ஹென்றி 42 ஓட்டங்களும் அடித்தனர்.

அவுஸ்திரேலியா தரப்பில் லயன் 4 விக்கெட்களும் ஹசில்வூட் 2 விக்கெட்களும், ஸ்டார்க், கம்மின்ஸ் மற்றும் மார்ஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 204 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஸ்மித் முதல் ஓவரிலேயே போல்ட் ஆனார். அடுத்து களமிறங்கிய மார்னஸ் லபுஷாக்னே 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அவுஸ்திரேலிய அணி 2ஆவது நாளில் 2 விக்கெட்களை இழந்து 13 ஓட்டங்களுடன் தடுமாறி வருகிறது.

உஸ்மான் கவாஜா 5 ஓட்டங்களுடனும், லயன் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நியூசிலாந்து தரப்பில் ரிம் சவுதி 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

அவுஸ்திரேலியா 217 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும். (ஐ)



# றொனால்டோவுக்கு ஒரு போட்டி தடை!

ரியாத், மார்ச் 02

ஒழுக்கமீறலுக்காக றொனால்டோவுக்கு ஒரு போட்டி தடையும் 16 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் உதைபந்தாட்ட வீரரான கிறிஸ்ரியானோ றொனல்டோ கழக அணிகளில் சவூதி அரேபியாவின் அல் நாசர் கழகத்துக்காக விளையாடி வருகிறார்.

அண்மையில் நடந்த சவூதி புரோ லீக் உதைபந்தாட்ட போட்டியில் அல்-நாசர் அணி 3-2 என்ற கோல் கணக்கில் அல் ஷபப் அணியை தோற்கடித்தது.

இந்த ஆட்டத்தின்போது றொனால்டோவை நோக்கி எதிரணி ரசிகர்கள் மெஸ்ஸி.... மெஸ்ஸி என்று கோஷம் எழுப்பினர். இதனால் கோபமடைந்த றொனால்டோ ரசிகர்களை நோக்கி கையால் ஆபாச சைகை காட்டினார்.

இதற்காக சவூதி அரேபிய உதைபந்தாட்ட சம்மேளனம் அவர் மீது ஒழுக்கமீறல் நடவடிக்கை எடுத்தது. இதன்படி அவருக்கு ஒரு போட்டி தடையும் இலங்கை மதிப்பில் 16 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது.

நேற்று முன்தினம் றொனால்டோ இல்லாமல் அல் நாசர் அணி, அல் ஹஸ்ம் அணியை எதிர்கொண்டது. இந்தப் போட்டி 4-4 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)

# உபதலைவர் பதவியிலிருந்து குர்ணல் பாண்ட்யா நீக்கம்!

லக்னோ, மார்ச் 02

லக்னோ அணியின் உபதலைவரான குர்ணல் பாண்ட்யா உப தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஐ. பி. எல். 17ஆவது தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதில் விளையாடவுள்ள லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் தலைவர், உபதலைவர் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை அந்த அணி வெளியிட்டுள்ளது.

அணியின் தலைவரராக கே. எல். ராகுல் தொடர்வார். இதேநேரம், உபதலைவராக இருந்த குர்ணல் பாண்ட்யா நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக மேற்கிந்தியத் தீவுகளை சேர்ந்த நிக்கோலஸ் பூரண் நியமிக்கப்பட்டுள்ளார்.

கே. எல். ராகுல் கடந்த தொடரில் காயத்தால் விளையாடாதபோது 6 போட்டிகளில் குர்ணல் பாண்ட்யாவே அணியை வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.





# இங்கிலாந்துடனான டெஸ்ட் இந்திய அணி அறிவிப்பு

மும்பை, மார்ச் 02

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 3-1 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை கைப்பற்றி உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி தர்மசாலாவில் தொடங்குகிறது.

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காயம் காரணமாக கே. எல். ராகுல் விலகியுள்ளார். 4ஆவது டெஸ்ட்டில் விளையாடத பும்ரா அணிக்கு திரும்பியுள்ளார்.

**அணி விவரம் -**

ரோஹித் சர்மா, ஜஸ்பிரித் பும்ரா, யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷூப்மன் கில், ரஜத் படிதார், சர்பராஸ் கான், துருவ் ஜூரல், கேஎஸ் பாரத், தேவ்தத் படிக்கல், அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், முகமது. சிராஜ், முகேஷ் குமார், ஆகாஷ் தீப்.



# போல் போக்பாவுக்கு 4 ஆண்டுகள் தடை!

ரோம், மார்ச் 02

ஜூவென்டஸ் அணிக்காக விளையாடி வரும் பிரான்ஸின் போல் போக்பாவுக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊக்கமருந்து பயன்படுத்தியமைக்காகவே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 20 அன்று ஜூவென்டஸ் அணி 3 - 0 என்ற கோல் கணக்கில் சீரி ஏ தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது. அந்தப் போட்டிக்கு பிறகு நடத்தப்பட்ட ஊக்கமருந்து சோதனையில் போல் போக்பா உடலில் அதிக டெஸ்டோஸ்டிரோன் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்தப் போட்டியில் அவர் விளையாடவே இல்லை. மாற்று வீரராக வெளியே அமர வைக்கப்பட்டு இருந்தார். அப்படி இருந்தும் அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் அவர் சிக்கினார். இதனால் உதைபந்தாட்ட போட்டியில் பங்கேற்பதற்கு அவருக்கு நான்கு ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் தனது 31ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் போக்பா ஆடுகளத்தில் மீண்டும் விளையாட முடியாமல், கிட்டத்தட்ட 35 வயது வரை ஓரங்கட்டப்படும் ஒரு நிலையை எதிர்கொள்கிறார். போக்பாவின் இடைநீக்கம் அவரது புகழ்பெற்ற வாழ்க்கையில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், சீரி ஏ லீக்கின் முக்கிய அணிகளில் ஒன்றான ஜூவென்டஸூக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவர் 2018இல் நடந்த உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அண்டி முர்ரே அதிர்ச்சி தோல்வி!

டுபாய், மார்ச் 02

டுபாய் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் இங்கிலாந்தின் அண்டி முர்ரே அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

டுபாய் சர்வதேச ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் அண்டி முர்ரே, பிரெஞ்சு வீரர் யூகோ ஹம்பர்ட்டுடன் மோதினார்.

பரபரப்பாக நடந்த போட்டியில் சிறப்பாக விளையாடிய ஹம்பர்ட் 6-2, 6-4 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். இதன்மூலம் அண்டி முர்ரே துபாய் சர்வதேச ரென்னிஸ் தொடரில் இருந்து வெளியேறினார். (ஐ)




# ரஷ்யாவுக்கு எதிராகப் போருக்குத் தயாராகிறதா பிரான்ஸ்?

## நேட்டோ இராணுவக் கூட்டணி என்ன சொல்கிறது?

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோங், ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரேனை ஆதரிக்க மேற்கு நாடுகள் தங்கள் துருப்புக்களை அனுப்பும் யோசனையை தவிர்க்கக் கூடாது என பேசியிருந்தார். அவருடைய இக் கருத்து ஐரோப்பா முழுவதும் அதனைக் கடந்தும் எதிர்வினைகளை பெற்று வருகிறது.

பிரான்ஸ் அதிபரின் இந்த கருத்து, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் தலைவர்கள், நேட்டோ உறுப்பினர்கள் ஆகியோர், இதுகுறித்து தங்கள் கருத்து வேறுபாடுகளை பரவலாக வெளிப்படுத்த வழிவகுத்தது.

உக்ரேனுக்கு மேற்கத்திய துருப்புக்களை அனுப்புவது ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையே நேரடி மோதலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா பலமுறை எச்சரித்துள்ளது.






"இந்த விவகாரத்தில் 'இது நிகழ்ந்திருக்கலாம்' என நாம் நினைப்பது குறித்து பேசக்கூடாது. ஆனால், (ஒரு மோதலின்) தவிர்க்க முடியாத தன்மையைப் பற்றி பேச வேண்டும். இதை நாங்கள் இப்படித்தான் மதிப்பிடுகிறோம்," என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், பிரான்ஸ் அதிபரின் கருத்து குறித்து கேள்வி எழுப்பியபோது கூறினார்.

**ரஷ்யா கூறியது என்ன?**

மேலும் பேசிய டிமிட்ரி பெஸ்கோவ் "இந்த நாடுகள் (மேற்கு நாடுகள்) அதை மதிப்பீடு செய்து விழிப்புடன் இருக்க வேண்டும். இது (துருப்புக்களை அனுப்புவது) அவர்களின் நலன்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் நாட்டு குடிமக்களின் நலன்களுக்கும் ஏற்றதா என அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்," என்றும் அவர் கூறினார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் கூறுகையில், "இது போன்ற எண்ணங்களை வெளிப்படுத்துபவர்கள், தங்கள் அறிவை ஐரோப்பாவிற்கு பாதுகாப்பான, பகுத்தறிவு சிந்தனைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்," என தெரிவித்தார்.

ரஷ்ய துருப்புக்கள் சமீபத்தில் உக்ரேன் பிரதேசத்தில் முன்னேறியுள்ளன. அதேநேரத்தில், உக்ரேனியர்கள் ஆயுதப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏராளமான பீரங்கி வெடிமருந்துகளுடன் மிகப்பெரும் ரஷ்ய துருப்புக்களுடன் தொடர்ந்து போரிடுவதற்கு, உக்ரேன் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளிடமிருந்து, குறிப்பாக அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களை பெரிதும் நம்பியுள்ளது .

ஆனால் அதிக ஆயுதங்களை அனுப்புவதற்கு அமெரிக்க பேரவையில் உடன்பாடு இல்லாதது மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து விநியோகத்தில் தாமதம் ஆகியவை உக்ரேன் ராணுவத்தின் நிலைமையை சிக்கலாக்குகின்றன.

**பிரான்ஸ் அதிபர் கருத்துக்கு எதிர்வினைகள்**

பாரிஸில் நடைபெற்ற ஐரோப்பிய தலைவர்கள் கூட்டத்தில், உக்ரேனின் வெற்றி ஐரோப்பாவின் ஸ்திரத்தன்மைக்கு முக்கியமானது என்று மக்ரோங் கூறினார். இந்த உச்சி மாநாட்டில் அந்நாட்டுக்கு ராணுவ வீரர்களை அனுப்புவது சாத்தியமா இல்லையா என்பது குறித்து விவாதித்தனர்.



"தற்போது தரைப்படைகளை அனுப்புவதில் ஒருமித்த கருத்து இல்லை. ஆனால் எதையும் நிராகரிக்க முடியாது," என்று பிரான்ஸ் அதிபர் தெரிவித்தார். 'இந்தப் போரில் ரஷ்யா வெற்றி பெறுவதைத் தடுக்க முடிந்த அனைத்தையும் செய்வோம். ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ரஷ்யாவின் தோல்வி அவசியம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்," என அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்கிழமை, பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர், ஸ்டீஃபன் செஜோர்ன், அந்நாட்டு அதிபரின் கருத்து குறித்து கூறுகையில், தீவிரமான போரில் துருப்புக்களை ஈடுபடுத்துவதை மக்ரோங் குறிப்பிடவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

"உக்ரேனை ஆதரிப்பதற்கான புதிய நடவடிக்கைகளை நாங்கள் பரிசீலிக்க வேண்டும். குறிப்பாக, உக்ரேனிய பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றுதல், இணைய பாதுகாப்பு, ஆயுதங்கள் உற்பத்தி ஆகியவை குறித்து நான் யோசித்து வருகிறேன்," செஜோர்ன் பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்.

**'பிரிட்டன் ஏற்கனவே துருப்புகளை அனுப்பியுள்ளது'**

எப்படியிருந்தாலும், மக்ரோங்கின் பரிந்துரை உயர்மட்ட உலகத் தலைவர்கள் சிலரால் நிராகரிக்கப்பட்டது.

ஜெர்மன் ஆட்சித்துறைத் தலைவர் ஓலாஃப் ஷோட்ஸ், "ஒன்று தெளிவாக உள்ளது: ஐரோப்பிய நாடுகள் அல்லது நேட்டோவில் இருந்து தரைப்படைகளை அனுப்புவதற்கு எந்த அடிப்படையும் இல்லை," என்றார்.



பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், தனது பங்குக்கு, தனது நாடு "ஏற்கனவே சிறிய எண்ணிக்கையிலான துருப்புக்களை யுக்ரேனுக்கு அனுப்பியுள்ளது," என்று கூறினார்.

"நாங்கள் பெரியளவிலான துருப்புக்களை அனுப்பத் திட்டமிடவில்லை. பிரிட்டன் தனது பிரதேசத்தில் ஏராளமான உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. நிச்சயமாக, நாங்கள் உக்ரேனிய துருப்புக்களுக்கு உபகரணங்கள் மற்றும் பிறவற்றை அனுப்புவதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிக்கிறோம்," என தெரிவித்தார்.

வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 'உக்ரேனுக்கு அமெரிக்கா துருப்புக்களை அனுப்பாது" என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், உக்ரேனிய துருப்புக்கள் தங்களை தற்காத்துக் கொள்ள தேவையான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் உள்ளிட்ட ராணுவ உதவியை வழங்குவதுதான் "வெற்றிக்கான பாதை" என தான் நம்புவதாக பைடன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியின் அலுவலகம், "ஐரோப்பிய நாடுகள் அல்லது நேட்டோவின் துருப்புக்கள் உக்ரேனிய பிரதேசத்தில் இருப்பதற்கு இத்தாலியின் ஆதரவு இல்லை," என்று கூறியது.

நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் உக்ரேனுக்கு உடனடியாக துருப்புக்கள் அனுப்பும் யோசனையை நிராகரித்தார். "நேட்டோ போர் துருப்புக்களை உக்ரேனிய பகுதிக்கு அனுப்பும் திட்டம் எதுவும் இல்லை," என்று அவர் குறிப்பிட்டார்.

சுவீடன், ஹங்கேரி, போலந்து மற்றும் செக் குடியரசின் தலைவர்களும் படைகளை போர்முனைக்கு அனுப்பும் நோக்கத்தை நிராகரித்துள்ளனர்.

(16ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களும் இராஜதந்திரிகளும்!

நிலாந்தன்

சில ஆண்டுகளுக்கு முன் இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட கைக்கடக்கமான தொகையினரை அவர் திண்ணை விருந்தினர் விடுதியில் சந்தித்தார். சந்திப்பு முடிந்து வெளியே வரும் பொழுது சிவாஜிலிங்கம் என்னிடம் கேட்டார். “அடுத்த கிழமை இதுதான் கட்டுரையா?” என்று. நான் சொன்னேன் “இல்லை இது பகிரங்கச் சந்திப்பு அல்ல. மூடிய அறைக்குள் நடந்த சந்திப்பு. இங்கு நான் ஒரு ரிப்போர்ட்டராக வரவில்லை. ராஜதந்திரிகளுடனான சந்திப்பு மூடிய அறைக்குள் நடக்கின்றது என்றால் அதன் பொருள் எல்லாவற்றையும் வெளியே கதைப்பதற்கு அவர்கள் தயாரில்லை என்பதுதான்” என்று.

ஏற்கனவே விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலத்தில், கனேடியத் தூதுவரோடு நடந்த உரையாடலை ஊடகம் ஒன்றுக்கு வெளிப்படுத்தியதாக ஒரு விமர்சனம் வந்தது. தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் மூடிய அறைகளுக்குள் தாங்கள் கதைப்பவற்றை வெளியே கூறுகிறார்கள் என்ற ஒரு விமர்சனம் ஒருபகுதி ராஜதந்திரிகள் மத்தியில் உண்டு.

ஒரு சிறிய அரசற்ற இனத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் விடையங்கள் தொடர்பில்,ரிப்போர்ட்டிங் செய்யும் போது அதிகம் நிதானம் வேண்டும். ஊடகத்தின் பார்வையாளர் தொகையை அதிகப்படுத்துவதற்காக, சுடச்சுடச் செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, பரபரப்பிற்காக ச்செய்திகளை அறிக்கையிடுவது வேறு. ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான செய்தி அறிக்கையிடல் வேறு.

ஒரு கட்சியை அல்லது ஓர் அரசியல்வாதியை அல்லது ஒரு நிதி அனுசரணையாளரை மகிழ்விப்பதற்காக அல்லது பார்வையாளர்களை கவர்வதற்காக செய்தியை அறிக்கையிடுவது வேறு. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக அறிக்கையிடுவது வேறு.

அதிலும் குறிப்பாக இது யுடியூப்பர்கள் காலம். வாசிப்பதற்கான பொறுமை குறைந்து வருகின்றது. கேட்பதற்கான தாகம் அதிகரித்து வரும் ஓர் ஊடகச் சூழல். யுடியூப்பர்கள் எத்தனை பேர் தேசத்தை கட்டியெழுப்பும் பொறுப்புணர்ச்சியோடு செயல்படுகிறார்கள்? தான் பரப்புவது வதந்தியா செய்தியா என்று எத்தனை யுடியூப்பர்களுக்குத் தெரியும்? எத்தனை யுடியூப்பர்கள் தமிழுக்கு வெளியே போய் வாசிக்கின்றார்கள்? எத்தனை யுடியூப்பர்கள் தாங்கள் வெளியிடும் தகவலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துகிறார்கள்? இதை இன்னும் கூர்மையாகக் கேட்டால் ஒரு யுடியூப்பருக்கு என்ன தகைமை இருக்க வேண்டும்? ஒரு நல்ல கமராவும் வேகமான இன்டர்நெற்றும் இருந்தால் மட்டும் போதுமா?

தாங்கள் கூறும் விடயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு எத்தனை யுடியூப்பர்களுக்கு உண்டு? கடந்த சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் காரில் வந்த ஒருவர் பொலீசாரோடு முரண்படுகிறார். அது தொடர்பாக ஒரு யுடியூப்பர் செய்தி வெளியிடுகையில் “காரில் வந்த இந்தியர், பார்த்து மிரண்ட இலங்கை பொலீஸ்” என்று தலைப்பிடுகிறார். அக்காணொளி ஆறு லட்சத்து எட்டாயிரம் பேர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொலிசாரைக் கேள்வி கேட்கும் நபர் ஓர் இந்தியர் அல்ல. சுயாதீன திருச்சபை ஒன்றின் பாஸ்டர். ஆயின், ஆறு லட்சத்துக்கும் அதிகமானவர்களிடம் அந்தப் பொய் சென்று சேர்ந்திருக்கின்றதா?

அது ஒரு தகவல் பிழை. ஆனால் மற்றொரு தொகுதி யுடியூப்பர்கள் அரசியல் விமர்சனம் என்று கூறி கற்பனைகளையும் ஊகங்களையும் பரப்புகிறார்கள். தான் கூற வரும் கருத்தைக் குறித்து ஆழமான வாசிப்போ கிரகிப்போ ஆய்வு ஒழுக்கமோ இல்லாத ஒரு யுடியூப் தலைமுறை உருவாகிவிட்டது. அவர்களில் அநேகரிடம் தேசத்தைக் கட்டியெழுப்பத் தேவையான பொறுப்புணர்ச்சி கிடையாது. இவ்வாறு விளக்கம் குறைந்த அல்லது பொறுப்பு குறைந்த அல்லது விவகார ஞானம் இல்லாத யுடியூப்பர்களின் காலத்தில் ஒரு தேசமாகத் திரள்வது எப்படி?

> **அரசியல் களத்தில் செயல்படும் ஒரு தரப்பாக தமிழ் மக்கள் தங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்படிக் கட்டியெழுப்பும் போது தங்களைச் சந்திக்க வரும் ராஜ தந்திரிகளிடம் முறைப்பாடுகளையும் வேண்டுகோள்களையும் முன்வைப்பதற்குப் பதிலாக நிபந்தனைகளை முன் வைக்கலாம் பேரம் பேசலாம்.**

அண்மையில் கொழும்புக்கான புதிய இந்தியத் தூதர் யாழ்ப்பாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறு தொகையினரைச் சந்தித்தார். அதில் அரசியல்வாதிகள் பல்கலைக்கழகப் பிரமுகர்கள் கருத்துருவாக்கிகள் போன்றவர்கள் அடங்குவர். சந்திப்பின் போது அதில் அழைக்கப்பட்டவர்கள் ஐந்துக்கும் குறையாத மேசைகளை சுற்றி அமர்ந்திருந்தார்கள். தூதுவர் ஒவ்வொரு மேசையாகச் சென்று அவர்களோடு உரையாடினார். அதில் ஒவ்வொரு மேசையிலும் என்ன உரையாடப்பட்டது என்பது அடுத்த மேசையில் இருந்த எல்லாருக்கும் தெரியாது. சந்திப்பு முடிந்ததும் ஊடகங்களுக்கு சில அரசியல்வாதிகள் தெரிவித்த தகவல்களை வைத்து ஊடகங்களும் ஊடகங்களும் யுடியூப்பர்களும் வியாக்கியானங்களை முன் வைத்தார்கள்.

கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் பிரதிநிதிகளை அல்லது குடிமக்கள் சமூகங்களை சந்திக்கும் தூதரக அதிகாரிகளும் ராஜதந்திரிகளும் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தரப்புகளைத்தான் சந்திப்பார்கள்.

இவ்வாறான சந்திப்புகளில் கலந்து கொள்ளும் அரசியல் செயற்பாட்டாளர்கள் அல்லது மதத் தலைவர்கள் அல்லது சிவில் சமூகப் பிரதிநிதிகள் அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொதுவாக மூன்று விதமான போக்குகளைப் பிரதிபலிப்பார்கள். முதலாவது போக்கு முறையிடுவது. அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக முறைப்பாடுகளை முன் வைப்பது. இரண்டாவது, உதவி கேட்பது. அதாவது தமிழ் மக்களுக்கு என்னென்ன தேவை இருக்கிறது என்று கூறி உதவி கேட்பது. மூன்றாவது வெளித் தரப்புகள் அரசாங்கத்தோடு நிற்கின்றன அல்லது தமிழ் மக்களுக்குப் பொருத்தமான விதங்களில் உதவவில்லை என்று கூறி வெளிநாடுகளின் மீது விமர்சனங்களை முன் வைப்பது.

இதில் முதல் இரண்டு போக்குகளும் தான் தூக்கலாக இருக்கும். குறிப்பாக அபிவிருத்தி மைய அரசியலை ஏற்றுக் கொள்பவர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்றவர்கள் அநேகமாக உதவிகளைக் கேட்பார்கள். என்னென்ன விடயங்களில் குறிப்பிட்ட நாடு தமிழ் மக்களுக்கு உதவலாம் என்று கோரிக்கைகள் அடங்கிய பட்டியலோடும் வருவார்கள். அவர்கள் பெரும்பாலும் உரிமை மைய அரசியலை முன்வைக்கும் குடிமக்கள் சமூகங்கள் தங்களுடைய உரையாடலை திசை திருப்புகிறார்கள் என்று எரிச்சல் அடைவதுண்டு.

இதில் மூன்றாவது வகை அதாவது வெளிநாடுகளை விமர்சிக்கும் தரப்பு மிகவும் குறைவு. குறிப்பிட்ட வெளிநாடு அரசாங்கத்தோடு நிற்கின்றது அல்லது தமிழ் மக்களுக்கு உதவவில்லை போன்ற கருத்துக்களை முன்வைத்து அந்த நாட்டின் மீது விமர்சனங்களை வைப்பவர்கள் அநேகமாகக் குறைவு. ராஜதந்திரம் எனப்படுவது என்கேஜ் பண்ணுவது. ராஜதந்திரிகளுடன் முரண்பட்டால் சில சமயம் அடுத்தமுறை சந்திக்கமாட்டார்கள். அதாவது தொடர்ந்து என்கேஜ் பண்ண முடியாது. எனினும், சில அரசியல்வாதிகளும் சில சிவில் சமூகப் பிரதிநிதிகளும் வெளிநாட்டுத் தூதுவர்களை சந்திக்கும் பொழுது நாசுக்காகவும் சில சமயங்களில் நேரடியாகவும் அப்படிப்பட்ட விமர்சனங்களை வைப்பதுண்டு.

எனினும் பொதுப் போக்கு முறையிடுவதும் உதவி கேட்பதுந்தான். அதைத் தொகுத்துச் சொன்னால் தமிழ் மக்கள் மத்தியில் வெளியாருக்காகக் காத்திருப்பவர்கள்தான் அதிகம் என்ற ஓர் உணர்வே வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஏற்படும்.

இவ்வாறு தீர்வுக்காக அல்லது உதவிகளுக்காக அல்லது மீட்சிக்காக வெளியாருக்காகக் காத்திருக்கும் ஓர் அரசியல் போக்கை அரசியல்வாதிகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பிரதிபலிக்கும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில், அண்மையில் கொழும்பில் நடந்த ஒரு சந்திப்பில், புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இந்தியத் தூதுவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் சர்ச்சைகளுக்குள்ளாக்கியது.

இந்தியா ஈழத் தமிழர்களைக் கைவிட்டு விட்டது என்ற பொருள்பட செய்திகள் வெளிவந்தன. ஏனெனில் இந்திய தூதுவர் இலங்கை மீது அழுத்தத்தை பிரயோகிப்பதில் தங்களுக்குள்ள வரையறைகளை உணர்த்தும் விதத்தில் சந்திப்பின்போது பேசியிருக்கிறார் என்று தெரிகிறது. இந்தியா ஏதோ ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது என்று மட்டும் தெரிகிறது. அதனால், ஈழத் தமிழர்கள் இந்தியாவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை என்று அண்மையில் மனோ கணேசன் மின்னல் நிகழ்ச்சியின் போது தெரிவித்திருந்தார்.

இந்திய தூதர் அப்படிச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அதுதான் உண்மை. எந்த ஒரு வெளிநாடும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தங்கத் தட்டில் வைத்துத் தராது. தமிழ் மக்கள் அதற்காகப் போராட வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் பேரபலத்தை அதிகப்படுத்தும் போது வெளிநாடுகள் தமிழ் மக்களை நோக்கி வரும். ஜேவிபிக்கு பேரபலம் அதிகரித்திருக்கிறது. என்பதனால் தான் இந்தியா ஜேவிபியை புதுடெல்லிக்கு அழைத்தது.

ரணில் விக்கிரமசிங்க, எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைக்கக் கூடியவர். எனவே அவரைக் கையாள்வதில் உள்ள நெருக்கடிகளை இந்தியா உணர்ந்திருக்கிறது. அதனால் கையாள இலகுவான ஒரு கூட்டை உருவாக்க இந்தியா விரும்பலாம். அவ்வாறு ரணிலுக்கு எதிராக ஏற்படக்கூடிய ஒரு கூட்டுக்குள் எதிர்காலத்தில் இணையக்கூடிய ஜேவிபியை இந்தியா அங்கீகரித்துப் பேச அழைத்திருக்கலாம்.

இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவோ, சீனாவோ எந்த ஒரு பேரரசாக இருந்தாலும், ஏன் சிற்றரசாக இருந்தாலும், அரசியலரங்கில் துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகளைத்தான் ஆர்வத்தோடு பார்ப்பார்கள். துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் வரலாற்றை உருவாக்குகின்றன. துணிந்து புகுந்து விளையாடும் போது தான் பேரமும் அதிகரிக்கும். எனவே தமிழ் மக்கள் வெளியாருக்காகக் காத்திருப்பதை விடுத்து வெளியார் தங்களை நோக்கி வரக்கூடிய விதத்தில் போராட வேண்டும். காய்களை நகர்த்த வேண்டும். பிராந்திய மற்றும் பூகோள சூழலை வெற்றிகரமாகக் கையாள வேண்டும். தமிழ் மக்களுக்காகக் கொழும்பைப் பகைக்கலாம் என்ற நம்பிக்கையை வெளிநாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

எந்த ஒரு வெளிநாடும் எந்த ஒரு சிறிய அரசற்ற மக்கள் கூட்டத்திற்கும் தீர்வைத் தங்கத் தட்டில் வைத்துக் கொடுப்பதில்லை. இந்த பூமியிலே போராட்டத்துக்கு உதவினாலும் சரி சமாதானத்துக்கு உதவினாலும் சரி தீர்வுகளுக்காக உழைத்தாலும் சரி எல்லாவற்றிற்கும் பின்னால் அரசியல் உள்நோக்கங்கள் இருக்கும். ராணுவ பொருளாதார நலன்கள் இருக்கும்.

எனவே தமிழ் மக்கள் தங்களுடைய பேரபலத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். இந்தியா எங்களை கைவிட்டு விட்டது, அமெரிக்கா கைவிட்டு விட்டது, ஐநா கைவிட்டுவிட்டது, சீனா தொடர்பான இந்தியாவின் சந்தேகங்களையும் அச்சங்களையும் அதிகப்படுத்துவதன் மூலம் இந்தியாவை நெருங்கி செல்லலாம்.. என்றெல்லாம் கணக்குப் போட்டுக் கொண்டு காத்திருப்பதற்குப் பதிலாக அரசியல் களத்தில் செயல்படும் ஒரு தரப்பாக தமிழ் மக்கள் தங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்படிக் கட்டியெழுப்பும் போது தங்களைச் சந்திக்க வரும் ராஜ தந்திரிகளிடம் முறைப்பாடுகளையும் வேண்டுகோள்களையும் முன்வைப்பதற்குப் பதிலாக நிபந்தனைகளை முன் வைக்கலாம் பேரம் பேசலாம்.

(ஆதவன் செய்தி)

# சாதனை மாணவன் ஸயானுக்கு பாராட்டு

காரைதீவு, மார்ச் 02

தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவன் ஸயானுக்கு இறக்காமத்தில் நேற்று ஊர் பூராக சரமாரியாக பொன்னாடை போர்த்தி பாராட்டுக்கள் குவிந்தன.

சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் அல்-அஷ்றப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இல் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவன் எம். கே. யூசுப் ஸயான் கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

அதனைத் தொடர்ந்து இறக்காமம் பூராக மாணவன் ஸயான் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். படி வாகனத்தில் வரவேற்கப்பட்டார். கோலாகலமாக இப்பாராட்டு நிகழ்வு ஊர் பூராக நேற்று இடம் பெற்றது.

செல்லுமிடமெல்லாம் சாதனை மாணவன் ஸயானுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து பரிசுகளும் வழங்கினார்கள்.

இறக்காமம் பிரதேச செயலகம் பிரதேச சபை கோட்ட பாடசாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கடைகள் அனைத்திலும் இக் கௌரவம் வழங்கப்பட்டது.

(அ)




# ரஷ்யாவுக்கு எதிராகப் போருக்குத்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

உக்ரேனுக்கு வீரர்களை அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி பேசுவதோடு மட்டுமல்லாமல், மக்ரோங் தனது உரையில் அந்நாட்டு தலைநகர் கீயவ்-க்கு “நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் வெடிகுண்டுகளை” வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளையும் குறிப்பிட்டுள்ளார். இது மோதலுக்கு வழிவகுக்கும் என்ற மேற்கு நாடுகளின் அச்சத்தால் இதுவரை நடக்கவில்லை.

**மக்ரோங்கின் நோக்கம் என்ன?**

“ஆனால், இதுபோன்ற விஷயங்கள் முற்றிலும் எதிர்பாராதது அல்ல: உக்ரேனுக்கு உறுதியான மற்றும் பெரியளவிலான ராணுவ ஆதரவு தேவை. இது, கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரான்ஸ் செய்யாத ஒன்று,” என்று சமூக ஊடகமான ‘எக்ஸ்’ தளத்தில் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியும் ராணுவ ஆய்வாளருமான நிக்கோலஸ் டிரம்மண்ட், பிரான்ஸ் அதிபர் “சர்வதேச அரங்கில் தனது பிம்பத்தை மேம்படுத்த” ஒரு தந்திரத்தைப் பயன்படுத்துகிறார் என்று நம்புகிறார்.



“பிரான்ஸ் அல்லது வேறு எந்த நேட்டோ நாடும் உக்ரேன் போர்க்களத்திற்கு துருப்புக்களை அனுப்புவது சாத்தியமில்லை. அந்நாடுகள் ரஷ்யாவிற்கும் புடினுக்கும் எதிராக மறைமுக போரை நடத்தலாம், ஆனால் நேரடியாக பங்கேற்கும் விருப்பம் அவர்களுக்கு இல்லை,” என்று அவர் “எக்ஸ்” தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிபிசி ரஷ்ய சேவையின் போர் செய்தியாளர் பாவெல் அக்செனோவின் கருத்துப்படி, ‘நீண்ட தூர ஏவுகணைகளை அனுப்புவது மற்றும் வீரர்களை நிலை நிறுத்துவது பற்றிய மக்ரோங்கின் கருத்துகள், மேற்கு நாடுகள் மற்றும் ரஷ்யாவிற்கு இடையே மறைமுகமான “சிவப்பு கோடுகளை” மீறுவது போன்று உள்ளது,” என தெரிவித்தார்.

“உக்ரேனிய போரில் வெளிநாட்டு துருப்புக்களின் பங்கேற்பு பற்றிய மக்ரோங்கின் கருத்துக்கள் இன்னும் இன்னும் தீவிரமான மீறலாகும். அத்தகைய வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் பல்வேறு மட்டங்களில் பலமுறை விவாதிக்கப்பட்டுள்ளன. ஆனால், இக்கருத்து தற்போது மிகப்பெரிய ஐரோப்பிய நேட்டோ உறுப்பு நாட்டின் தலைவரால் கூறப்பட்டுள்ளது,” என அக்செனோவ் குறிப்பிட்டார்.

இது சிறிய, நுட்பமான நகர்வுகளின் உத்தியின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

